Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி -24 | 10-11-2003 | திங்கட்கிழமை | ஓசை 265

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்

R.V. பந்தல் சேவை, தர்மபுரம் (சி-8689) யாழ் சாலை, கிளிநொச்சி.

## பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதினால்

# சமாதான முன்னெடுப்பிற்கான பொறுப்பை சனாதிபதி சந்திரிகாவே ஏற்க வேண்டும்!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

**எமது அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சர்களின் பொறுப்புக்களை சனாதிபதி சந்திரிகா ஏற்றுள்ளமையால் சமாதான முன்னெடுப்புக்களின் பொறுப்பை சனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.**



இது தொடர்பாக நேற்று ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிக்கையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்விடயம் குறித்து அமெரிக்கா, நோர்வே நாடுகளின் பிரதிநிதிகளிடம் விளக்கிக் கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

நடைமுறையில் சமாதான முன்னெடுப்புக்களை தம்மால் மாத்திரம் பொறுப்பேற்க முடியாது.

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பில் சனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு அமைச்சு மிக முக்கிய பங்கை வகிக்கிறது. இந்த நிலையில் சமாதான முன்னெடுப்புக்களின் பொறுப்பை சனாதிபதி ஏற்றுக் கொள்ளவேண்டும் என பிரதம மந்திரி சுட்டிக்காட்டியுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க...)

### கற்கோவளம் பகுதியில் மிதிவெடியகற்ற படையினர் தடையினால் மக்கள் விசனம்

வடமராட்சி கற்கோவளம் பகுதியில் படையினரால் கைவிடப்பட்ட பாதுகாப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகளில் மிதிவெடிகளை அகற்றல் சம்பந்தமான விடயத்தில் படையினருக்கும் மக்களுக்கும் இடையே முறுகல் நிலை உருவாகியுள்ளது. 1995இல் இருந்து இப்பகுதியில் முகாம் அமைத்து தங்கியிருந்த படையினர் புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து அக்காவல் நிலைகளைக் கைவிட்டு மீள்குடியமர்வுக்கு அனுமதியும் வழங்கினர். இதனால் அங்குபடையினர் தம் பாதுகாப்பிற்காக விதைத்த கண்ணிவெடிகளைஅகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மிதிவெடிஅகற்றும் டெனிஸ் குழுவினர் மேற்கொண்டு வந்தபோது நேற்று முன்தினம் அவ்விடத்திற்கு வந்திறங்கிய படையினர் அவற்றை அகற்ற வேண்டாம் என எச்சரித்ததைத்தொடர்ந்து அப்பகுதி மக்கள் மிதிவெடி அகற்றுதல் தொடர்பான தேவைப்பாடுகளைக் கூறியதால் இம் முரண்பாடு உருவானது. இது தொடர்பாக 524 ஆம்பிரிகேட் தளபதியிடம் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.(27,33)

### -போதைப்பொருள் வைத்திருந்ததாக-

## விமானப்படைச்சிப்பாய் பொலிசாரால் கைது!

(வவுனியா)

சிறிலங்கா விமானப்படைச்சிப்பாய் ஒருவர் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து எண்பது மில்லிகிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க இரண்டு கிராம் போதைப்பொருள் வைத்திருந்ததால் அந்த நபருக்கு இலங்கைச்சட்டத்தின்படி தூக்குத் தண்டனை வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

## அமைச்சர்களின் பதவியைப் பறிக்கவில்லை சில முக்கிய துறைகளைத் திரும்பப்பெற்றேன்

### -பி.பி.சிக்கு சந்திரிகா பேட்டி



(கொழும்பு)

மூன்று அமைச்சர்களின் பதவிகளைப் பறிக்கவில்லை. அவர்களிடம் இருந்து சில முக்கிய துறைகளை திரும்பப்பெற்று அவற்றை எனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளேன். அவ்வளவு தான் என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பி.பி.ஸிக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

எவ்வளவோ தூண்டுதல்கள் இருந்தபோதும் தான் காழ்ப்புணர்ச்சி காட்டாது கண்ணியமாக நடந்து கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர், அமைச்சரவைக் கூட்டத்தின் போதெல்லாம் இந்த அரசு தன்னை மோசமாக இழிவுபடுத்தியதாகத் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டங்களில் தன்னை படுமோசமாக நடத்தியதைக் கூறிக் கொண்டே போகலாம் எனத் தெரிவித்த சந்திரிகா தன்னை படுமோசமாக நடத்தினார்கள் என்று தான் சொல்ல வேண்டும் எனத்

(8ஆம் பக்கம் பார்க்க...)

## புலிகளுடன் இணைய முன்வந்த சிறுமிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

கரையோரக் காவல் பணியில் ஈடுபட்டிருக்கும் படையினரது அச்சுறுத்தலால் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர வந்த இரு பாடசாலை மாணவிகள் மீளப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சக்கோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த 15வயதேயான மேற்படி இரு மாணவிகளுமே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொள்ளவென வதிரியிலுள்ள வடமராட்சிக் கோட்ட அலுவலகத்திற்கு நேற்றுக் காலை வருகை தந்திருந்தனர்.

எனினும் 18வயதுக்குட்பட்ட சிறார்களைத் தமது அமைப்பில் இணைத்துக்கொள்வதில்லை யென்ற முடிவின் பிரகாரம் இச் சிறுமிகளை அவர்களின் பெற்றோரிடம் கையளிக்க விடுத

(8ஆம் பக்கம் பார்க்க...)

### வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக 06.11.2003 அன்று போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

2ம் லெப். அறிவுமாறன்
(சின்னத்தம்பி அருள்தாஸ்
சிவன்கோவிலடி சாவகச்சேரி-யாழ்
தற்காலிக முகவரி - 55ம் கட்டை, கிருஸ்ணபுரம், கிளிநொச்சி)

என்பவரே சாவடைந்தவராவார். இவருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சனாதிபதி சந்திரிகாவின் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை உண்மைக்குப் புறம்பானவை

### முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)

சனாதிபதி பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக சமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மறுத்துள்ளார்.

பாதுகாப்பு உட்பட மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்ற சனாதிபதி நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இதன்போது பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றமைக்கான காரணங்கள் குறித்து அவர் விளக்கமளித்தார். இந்தக் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை என அமைச்சர் திலக் மாரப்பன குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை உட்பட நாட்டின் பாதுகாப்பு விடயங்களில் சனாதிபதியின் ஆலோசனைப்படியே முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த நிலையில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் தமது ஆலோசனை பெறப்படவில்லையென சனாதிபதி கூறியிருப்பது ஆதாரமற்றது.

1995ஆம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில்

(8ஆம் பக்கம் பார்க்க...)

## புலிகளின் இ.கா.திட்ட வரைவு குறித்து ஒருமித்த கருத்துத்திரட்ட முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால திட்டவரைவு தொடர்பாக பௌத்தப் பீடங்களின் ஒருமித்த கருத்தைப் பெறுவதற்கு மகாசங்கத்தினர் முயற்சித்து வருகின்றனர்.

தேசிய சங்க சம்மேளன சபாபதி எல்லாவெல மெதானந்த தேரர் இது தொடர்பில் எதிர்வரும் 12ஆம்திகதி கண்டிக்கு சென்று அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளைச் சந்திக்கவிருக்கிறார்.

அத்துடன் அவரின் தலைமையில் அன்றைய தினம் தலதாமாளிகைக்கு முன்னால் சத்தியாக்கிரகமும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பௌத்தமதத்தில் அஸ்கிரிய, மல்வத்த, ராமன்ய போன்ற பீடங்கள் இயங்கிவருகின்றன.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்ட வரைவு மற்றும் சனாதிபதியின் பிந்திய நட

(8ஆம் பக்கம் பார்க்க...)

## வீரவேங்கை கவிதனுக்கு இன்று நடுகல் திரைநீக்கம்

சூரிய கதிர் இராணுவ நடவடிக்கையின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை கவிதன் (கதிர்வேலு ரவிக்குமார் அந்தணத்திடல் கரவெட்டி) எனும் மாவீரனின் நடுகல் உடுப்பிட்டி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் இன்று மாலை திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

1995ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் பத்தாம் திகதி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இப் போராளிக்கான வீரவணக்கநிகழ்வின் பின் பூரண இராணுவ மரியாதையுடன் நினைவு நடுகல் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது. (27)

## வரி விளம்பரம்

### விதை உழுந்து விற்பனைக்கு

நல்ல ரக விதை உழுந்து விற்பனைக்குண்டு. திருவையாறு விவசாயக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி. (3855)

### விற்பனைக்கு

மரக்கறி நாற்றுக்கள்: தக்காளி- ரவி, கே.-சீ-1 இனம் நல்லின கத்தரி இனங்கள் மற்றும் பழமர நாற்றுக்கள் விற்பனைக்குண்டு. சுஜீதா நாற்றுப்பண்ணை 261- புதிய புன்னை நீராவி விசுவமடு. உரிமையாளர் முரசுமோட்டை மு. கந்தசாமி. (3859)

### சிறு விளம்பரம்

Jeevasoft Systems ஊடாக PC- Assembling, PC- Upgrading, PC- Repaw, Software Developing, Web Designing ஆகியன செய்து கொடுக்கப்படும். மேலதிக தொடர்புகளுக்கு: திரு. கா.ஜீவலிங்கம், C.C. பாடசாலை அருகே புதுக்குடியிருப்பு. (3725)

### வகுப்புக்கள் ஆரம்பம்

Advancer Computing Institution ஊடாக Hard Ware, Wep Design, Programming போன்ற நவீன வகுப்புகளுடன், கணினி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்களும் 15-11-2003 ஆரம்பம். தொடர்புகட்கு: திரு. கா. ஜீவலிங்கம், C.C. பாடசாலை அருகே புதுக்குடியிருப்பு. (3726)


# கோசல்யாவின் கதைகள், கவிதைகள் நேற்று இராமநாதபுரத்தில் வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

புலம்பெயர்ந்த புதல்வியின் தாய் மண்ணின் வெளியீடான 'கோசல்யாவின் கதைகள், கவிதைகள்' நூல் வெளியீட்டு விழா நேற்று கிளி. இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.






நேற்று பிற்பகல் 3.15மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கல விளக்கினை தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பொன்னுத்துரை, கிளி. இராமநாதபுரம் மகாவித்தியாலய அதிபர் இரத்தினகுமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஏற்றி வைத்தார். அடுத்து தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. தொடர்ந்து கிளி. மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது.

நிகழ்வில் வட்டக்கச்சிப் பிரதேசப் பொறுப்பாளர் வேளினி வரவேற்புரையை நிகழ்த்தினார். விருந்தினர் உரையை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் நிகழ்த்தினார். முதன்மை உரையை தமிழீழஅரசியல்துறைமகளிர்பொறுப்பாளர் தமிழினி ஆற்றினார். வெளியீட்டுரையை தமிழ்மொழி உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் நிகழ்த்தினார்.

அடுத்து கோசல்யாவின் கதைகள், கவிதைகள் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலினை நூலாசிரியரின் துணைவர் சொர்ணலிங்கம் வெளியிட்டு வைக்க மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா பெற்றுக் கொண்டார்.

அடுத்து பெண்ணிய நோக்கு என்ற தலைப்பில் ஆதிலட்சுமி சிவகுமார், மண்ணிய நோக்கு என்ற தலைப்பில் அமரசிங்கம் கேதீஸ்வரன், படைப்பிலக்கிய நோக்கு என்ற தலைப்பில் க. கணேசலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். பதிலுரையை நூலாசிரியர் கோசல்யா சொர்ணலிங்கம் நிகழ்த்தினார். நன்றி உரையைத் தொடர்ந்து நிகழ்வுகள் நிறைவு பெற்றது. (லோ, 12)

# வீதிக்கு குறுக்கே வீழ்ந்து கிடக்கும் மின் கம்பங்களால் மக்கள் அச்சம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் மின் கம்பங்கள் சரிந்து வீழ்ந்துள்ளமையால் வீதியால் செல்லும் பயணிகள் அச்சமடைந்துள்ளனர்.

சில மின் கம்பங்கள் நேற்று வீதிக்குக் குறுக்கே வீழ்ந்து கிடந்ததை அவதானிக்க முடிந்தது. பாடசாலை அருகேயுள்ள வீதியிலும் இவ்வாறு மின்கம்பமொன்று வீழ்ந்து கிடந்தது. சில பழுதடைந்து முறிந்து விழும் அபாய நிலையிலுமுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் அச்சத்துடனேயே பயணம் செய்ய வேண்டியுள்ளது. (12)

# முள்ளி. வித்தியானந்த மாணவிக்கு கர்நாடக சங்கீதத்தில் முதல் பரிசு

அகில இலங்கை சாக் பெண்கள் அமைப்பு 2003 உயர்தர பாடவிதானத்தில் கர்நாடக சங்கீதத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் அடிப்படையில் அகில இலங்கை கர்நாடக சங்கீத பரீட்சையில் சித்தியடைந்தோர்க்கு பரிசில்கள் வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

மேற்படி பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி மாணவி பெற்று பரிசுக்குத் தெரிவாகியுள்ளார்.

மேற்படி தெரிவில் வித்தியானந்தக் கல்லூரி மாணவியான மகேந்திரம் மகிதாசினி என்பவருக் கான பரிசு எதிர்வரும் 14ஆம் திகதியன்று கல்வி அமைச் சரினால் வழங்கப்படவுள்ளது. (ஆ)

## தண்ணீர் தாங்கி அமைக்க ஏற்பாடு

முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் நலன்விரும்பி ஒருவரின் நிதியுதவியுடன் தண்ணீர் தாங்கி ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கனடாவில் உள்ள கந்தையா அவர்களின் குடும்பத்தினர் மேற்படி தண்ணீர் தாங்கியை அமைக்க பாடசாலை அபிவிருத்திக் குழுவிடம் ஒரு இலட்சம் ரூபாவினை அனுப்பியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கட்டட வேலைகள் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மேற்படி பாடசாலை அதிபர் க.வீரசிங்கம் தெரிவித்துள்ளார். (ஆ)

# குமுளமுனைப் பிரதேசத்தில் பாத்தீனியம் அழிப்பு

முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் குமுளமுனை விவசாய போதனாசிரியர் பிரிவில் பாத்தீனியம் களை இனங்காணப்பட்டு சிரமதான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அழிக்கப்பட்டு வருகின்றன.

குமுளமுனை கொட்டுக்கிணற்றடி பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இனங்காணப்பட்ட மேற்படி களை அழிப்பு சிரமதான நிகழ்ச்சி கடந்த 3ஆம் திகதி நடைபெற்றது.

மேற்படி களை அழிப்பு சிரமதான நிகழ்ச்சியில் குமுளமுனை விவசாயப் போதனாசிரியர், பாடவிதான உத்தியோகத்தர், முள்ளியவளை விவசாய போதனாசிரியர், முள்ளியவளைப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர், குமுளமுனை கமநல அபிவிருத்திப் பெரும்பாக உத்தியோகத்தர், குமுளமுனை வலய அரசியல்துறைப் பொறுப்பாளர், குமுளமுனை மத்தி கமக்கார அமைப்பு அங்கத்தவர்கள், அப்பகுதி பாடசாலை மாணவ மாணவிகள், அப்பகுதி விவசாயப் பெருமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ஆ)

# சமூக சேவை நிறுவனங்களில் யாழ். அரசாங்க அதிபர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சமூக சேவை நிறுவனங்களின் பொறுப்பற்ற தன்மையால் சர்வதேச நிதி நிறுவனங்களூடாக கிடைக்கப் பெறும் நிதி உதவிகளைப் பூரணமாகவும் திருப்திகரமாகவும் பயன்படுத்த முடியாது போகின்றது என யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் கவலை தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் உள்ள சமூக சேவை நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரச புறக்கணிப்புகளினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டம் அதில் இருந்து விடுபட்டு அபிவிருத்தி நோக்கி நகர்வதற்கு சமூக சேவை நிறுவனங்களின் தேசப்பற்றுமிக்க செயற்பாடுகள் அவசியம் எனவும் இந்த உணர்வும் தகுந்த ஆற்றலும் இச்சமூக சேவையாளர்களிடையே வளர்க்கப்பட வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (33)

# மனித உரிமைகளைக் கண்காணிக்கும் இணைப்பு அலுவலகங்கள்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் மனித உரிமைகளைக் கண்காணிக்கும் இணைப்பு அலுவலகங்கள் வடக்கு-கிழக்கு உட்பட இலங்கையின் சகல மாகாணங்களிலும் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இவ் அலுவலகங்கள் இது வரை நிறுவப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையங்களில் பொது மக்கள் துன்புறுத்தப்படுதல் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான பதவி உயர்வுகள் வழங்கப்படாமை தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிராந்திய அலுவலகங்களில் விசாரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கோப்பாய் பாலத்தில் படையினர் சோதனை

கோப்பாயின் பாலப்பகுதியில் படையினர் மீண்டும் தம் சோதனை நடவடிக்கைகளை நேற்று முன் தினம் முதல் ஆரம்பித்துள்ளனர். கோப்பாயில் இருந்து கைதடி செல்லும் வீதியில் உள்ள மேற்படி பாலப்பகுதியில் புரிந்துணர்வு ஒப்பந்த காலத்திற்கு முன்பு சாவடிகளை நிறுவி படையினர் சோதனை நடவடிக்கைளை மேற்கொண்டு வந்தாலும் பின் அதனை கைவிட்டிருந்தனர். ஆனால் மீண்டும் இப் பகுதியில் சோதனை நடவடிக்கைகள் படையினரால் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்கமுடிகிறது. (33)

## உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட இறுதிப்போட்டிகள் இன்று

பூநகரி தவளைத் தாக்குதலின் 10ஆம் ஆண்டு நிறைவு விழாவின் இறுதி உதைபந்து,வலைபந்து போட்டிகள் இன்று பிற்பகல் 2.00மணிக்கு ஆரம்பமாகும். இறுதி வலைபந்துப் போட்டியில் நல்லூர் கழக அணியும் பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் கழக அணியும் மோதவுள்ளன.

இறுதி உதை பந்தாட்டப் போட்டியில் வலைப்பாடு ஜெக மீட்பர் அணியும், பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் அணியும் மோதவுள்ளன.

இதேவேளை நாளை ஆண்களுக்கான மரதன் ஓட்டம் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இருந்து பரந்தன் ஊடாக பூநகரி விளையாட்டுத்திடலைச் சென்றடையும். இந் நிகழ்வு காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பெண்களுக்கான மரதன் ஓட்டம் பூநகரி தியாக தீபம் மருத்துவமனையில் ஆரம்பித்து வாடியடியைச் சென்றடையும். இதற்கான ஏற்பாடுகளை வெற்றி விழா செயற்பாட்டுக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.(34)

# போரூட் நிறுவன தொண்டர்களுக்கு சேவைக் காலப் பயிற்சி வகுப்பு

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லை. மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியினால் போரூட் நிறுவனத் தொண்டர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு முல்லை. மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதன் முதல் சுற்று 09-10-2003 தொடக்கம் 13-10-2003 வரை நடைபெற்றது.

தற்போது இரண்டாம் சுற்று 01-11-2003 தொடக்கம் 05-11-2003 வரை நடைபெற்றது.

இவர்களுக்கான பயிற்சிகள் சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை மருத்துவமாது திருமதி இராசேஸ்வரி தியாகராசா, மருத்துவ மாதுக்கள் ஆகியோரினால் வழங்கப்பட்டன.

முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 22 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# கால் நடைகளை கட்டி வளர்க்க கோரல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிகளில் 2003-2004ஆம் ஆண்டுக்கான காலபோக(பெரும் போகம்) நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதனால் கால் நடை உரிமையாளர்கள் தமது கால் நடைகளைக் கட்டுப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

கால்நடை உரிமையாளர்கள் கால்நடைகளை 10.11.2003ல் இருந்து கட்டிவைக்குமாறும் தவறும் பட்சத்தில் குற்றப்பணம் அறவிடப்படும் எனவும் வட்டக்கச்சிப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் குறிப்பிட்டுள்ளனர். (12)

# குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்குக் கடனுதவி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் கடற்படைத் தாக்குதல்களில் 241குடும்பங்கள் குடும்பத் தலைவர்களை இழந்துள்ளனர் என்று வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் கடற்றொழிலாளர் சங்கங்களில் மேற்கொண்ட விவரத்திரட்டிலிருந்து தெரியவந்தது. வடமராட்சிக் கிழக்கில் 15 கடற்றொழிலாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இக்குடும்பங்களின் நிலையை கருத்திற்கொண்டு வடமராட்சிக் கிழக்கு கடற்றொழிலாளர் சமாசம் 24 குடும்பங்களுக்கு நான்கு லட்சத்து முப்பதினாயிரம் ரூபாவினை சுழற்சி முறை வட்டியில்லாக் கடனாக வழங்கியுள்ளது. இதில் 20குடும்பங்களுக்கு 15000 வீதமும் 2குடும்பங்களுக்கு 25000 வீதமும் 2குடும்பங்களுக்கு 40000 வீதமும் வழங்கியுள்ளது.

இச் சுழற்சி முறையினால் கிடைக்கும் நிதியினை வைத்து ஏனைய ஒரு தொகுதி குடும்பங்களுக்கும் மிக விரைவில் தொழில் முயற்சிக்காக வழங்கவுள்ளது. என சமாச நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## மாற்றம் வேண்டும்!

-வெஸ்லி கிளார்க்

ஈராக் தொடர்பான அமெரிக்கா வின் கொள்கை மாற்றம் பெற வேண் டும். சர்வதேச அமைப்புக்கள் ஈராக் கில் கூடுதல் பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும் என அமெரிக்காவின் சனநாயகக் கட்சி சனாதிபதி அபேட் சகர் வெஸ்லி கிளார்க் தெரிவித்துள்ளார்.

# சவுதி தலைநகரில் பாரிய தற்கொலைத் தாக்குதல் 20 பேர் பலி; நூற்றுக்கும் மேலானோர் காயம்!

## -வெளிநாட்டினர் குடியிருப்புக்கள் அழிந்தன

(றியாத்)

**சவுதி அரேபியாவின் தலைநகர் றியாத்தில் நேற்று அதிகாலை நடந்த பாரிய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 20 பேர் பலியாகியுள்ளார்கள். நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந் துள்ளனர்.**

தலைநகரிலுள்ள இராஜதந்திர வட்டாரத்திற்கு அருகில் பல இடங் களில் தற்கொலைத் தாக்குதல்கள் குறிப்பாக வெளிநாட்டவர்கள் தங்கு மிடங்களில் ஆங்காங்கே நடை பெற்றுள்ளன.

சவுதி அரேபியாவில் தற் கொலைத் தாக்குதல்கள், குண்டு வெடிப்புக்கள் நடைபெறலாம் எனும் அச்சம் காரணமாக அமெரிக்கா தனது தூதரகத்தை நேற்று முன் தினம் மூடியுள்ள நிலையில், மறு நாள் இக்குண்டு வெடிப்புக்கள் நடைபெற்றுள்ளன.

இதில் குடியிருப்புப் பகுதிகள் பல முற்றாகச் சிதைந்து போயுள்ளன.

இந்தத் தாக்குதலை அல் ஹைதா தீவிரவாதிகளே நடத்திய தாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தற்கொலைக் குண்டுத் தாக் குதல்கள் நடத்தப்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் லெபனான், சிரியா, எகிப்து பிரஜைகளே தங்கியிருந்தார் கள் என்றும் அவர்கள் அனைவரும் அரேபியர்கள் என்றும் சவுதி அதி காரி ஒருவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பஹ்ரெய்ன், கட்டார் போன்றவற்றில் மேற்கத்தியர்களுக்கு எதிரான தீவிரவாதத் தாக்குதல்கள் அபாயம் அதிகம் உள்ளதாகப் பிரிட்டிஷ் எச்சரிக்கை செய்துள் ளது. அதுமட்டுமன்றி, குவைத், ஐக்கிய அரபு எமிரேட்டில் இந்த நிலை ஏற்படுவதற்கான நிலைமை கள் அதிகமாக உள்ளதாகவும் பிரிட்டிஷ் வெளிநாட்டு அலுவலகம் கூறியுள்ளது.

இது இவ்வாறிருக்க கடந்த 06 மாதங்களுக்கு முன்னர் றியாத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 09 அமெரிக்கர்கள் உட்பட 35 பேர் பலியானது தெரிந்ததே.



பாக்தாத்தில் குண்டுத் தாக்குதலுக்குள்ளான செஞ்சிலுவைச் சங்கத்தினர் அங்கிருந்து அகன்றதையடுத்துத் தளபாடங்களைக் எடுத்துச் செல்லும் ஈராக்கியர்கள்.

# பலஸ்தீன அதிகார தரப்பினரிடையிலான பிரச்சினை தீர்வதில் சிறிதளவு மேம்பாடு!

பலஸ்தீனத் தலைவர்களிடையே புதிய அரசு அமைப்பது பற்றிய பேச்சுவார்த்தைகளில் குறிப்பிட்டளவு மாற்றம் ஏற்பட்டுள்ளதாகப் பிரதமர் அகமட் குரி கூறியுள்ளார்.

புதிய அரசின் கீழ் உள்துறை அமைச்சகத்திற்கும் தேசிய பாதுகாப்புசபைக்குமிடையே அதி காரப் பகிர்வுக்கு வகை செய்யும் பாது காப்பு ஒப்பந்தம் ஒன்றிற்கு பலஸ்தீன சனாதிபதி யஸீர் அரபாத்தும், பிரதமர் அகமட் குரியும் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

இதனை ரமல்லாவில் சனாதிபதி யஸீர் அரபாத்தைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திய பின்னர் பிரத மர் அகமட் குரி நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.




ஜெருசலேம் அருகிலுள்ள முஸ்லீம் கிராமம் ஒன்றில் பாரிய சுவர் ஒன்றைக் கட்ட இஸ்ரேல் எடுத்துள்ள முடிவைக் கண்டித்து பாலஸ்தீன – இஸ்ரேலிய மக்கள் கூட்டாக ஆர்ப் பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

# சனநாயக ஆதரவுத் தலைவி இராணுவ ஆட்சியாளரால் விடுதலை

மியான்மாரில் இராணுவ ஆட்சி யாளர்கள் சனநாயக ஆதரவுத் தலைவி ஆங்சாங் சூகியை விடு தலை செய்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் ஜாம்பூலில் செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நா. சபை மனித உரிமைக் கழகப் பிரதி நிதி இதைக் கூறியுள்ளார்.

ஆனால், தன்னுடன் கைது செய் யப்பட்ட 35 பேரும் விடுதலை செய் யப்படும் வரை தாம் இந்த விடு தலையை ஏற்கப்போவதில்லை என சூகி கூறியதாகவும் ஐ.நா.பிரதிநிதி கூறியுள்ளார்.

சென்ற மாதம் பாலியில் நடந்த உச்சி மாநாட்டில் சூகியை விடு தலை செய்யும்படி 10 ஆசிய உறுப் பினர்கள் மியான்மார் அரசை வற் புறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் நேற்று தேர்தல் வாக்களிப்பு பிரதமரின் பலம் குறித்துச் சந்தேகம்

(டோக்கியோ)

ஜப்பானில் நேற்று பொதுத் தேர் தலுக்கான வாக்குப் பதிவுகள் நடை பெற்றன.

பிரதமர் ஜிமிசிரோ கொய்சுமி அவரது பொருளாதார சீர் திருத்தங் களை மேற்கொள்வதற்கு போதிய மக்களின் ஆதரவு இருக்கின்றதா என்பதற்காகவே இந்தத் தேர்தல் அமையும் என நம்பப்படுகின்றது.

ஏற்கனவே நடத்தப்பட்ட அபிப்பி ராய வாக்கெடுப்பில் இருந்து பிரதம மந்திரி கொய்சுமியின் லிபரல் சன நாயகக் கட்சி தலைமையிலான கூட் டணி இந்தத் தேர்தலில் பெரும் பான்மையுடன் வெற்றி பெறும் எனத் தெரியவருகின்றது.

ஆனால் 2001ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பதவிக்கு வந்த பிரதமர் கொய்சுமி பொதுச் செலவினத் துண் டிப்பு, தனியார் மயப்படுத்தல், வீழ்ச்சியடைந்துவரும் வங்கிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு இந்தத் தேர்தலில் மக்கள் ஆணையைப் பெறுவாரா என்பது தேர்தல் முடிவில் தான் தெரியவரும்.




இந் தோனேசிய ஆஷே மானிலத்தில் நீடிக் கப்பட்டுள்ள இராணுவ சட்டத்தை கண்டித்தும் படுவா தீவை ஏனைய மாநிலங் களிலிருந்து பிரிப்பதற்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம் நடத்தும் இந்தோ னேசியர்கள்

# சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோவில்; மசூதி கட்டும் திட்டத்தைக் கைவிட வேண்டும்


## -விஸ்வ ஹிந்து பரிசட் கோரிக்கை

(புதுடில்லி)

அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோவில் கட் டப்படும். முஸ்லிம்கள் சர்ச் சைக்குரிய இடத்தில் மசூதி கட்டும் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று விஸ்வ ஹிந்து பரிசட்டின் சர்வதேசப் பொதுச் செயலாளர் பர வீண் தொகாடியா கூறியுள்ளார்.

ஒரிஸாவில் சம்பத்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் ராமர் கோவில் கட்டப்படும் வரை இந்த இயக்கம் தொடர்ந்து இயங்கும் என்றும் கூறியுள்ளார்.

இதனிடையே அயோத்தியாவில் கரசேவகபுரத்தில் ராஜ ஜென்ம ஆலய மாதிரிக்கு அருகில் 1954 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஆவணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக விஸ்வ ஹிந்து பரிசட் கூறியுள்ளது.



இந்திய ராஜஸ்தான் மாநிலத்தில் புஸ்கார் ஒட்டகச் சந்தையில் தமது ஒட்டகத்தின் அருகில் மாலைநேரத் தொழுகையிலீடுபடும் இஸ்லாமியர்கள்

## விமானங்கள் கொள்வனவு

(புது டில்லி)

இந்திய விமான நிறுவனம் 20,000 கோடி ரூபா செலவில் தொலைதூரம் செல்லக் கூடிய மற்றும் 40 ரக விமானங்களையும், குறுகிய தூரம் செல்லக் கூடிய எட்டுப் போயிங் ரக விமானங் களையும் கொள்வனவு செய் யவுள்ளதாக நேற்று முன்தினம் கூறியுள்ளது.

இந்த விமானங்களை வாங்கிய பின்னர் அமெரிக்க, ஐரோப்பா மற்றும் பல புதிய இடங் களுக்கான விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

# சனாதிபதி தேர்தலை ஆட்சேபித்து எதிர்க்கட்சிகள் போர்க்கொடி

மொறிடானியாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தலில் சனாதிபதி தயா வெற்றி பெற்றுள்ளார்.

ஆனால் மொறிடானியாவின் எதிர்க்கட்சிகளோ இந்த வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று குற்றம் சாட்டியுள்ளன.

வாக்கெடுப்பில் பல மோசடிகள் இடம் பெற்றுள்ளதாகக் கூறும் எதிர்க்கட்சிகள் இந்தத் தேர்தல் முடிவை எதிர்த்து நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளதாகவும் கூறியுள்ளன.

# மையம் கொண்டுள்ள அரசியல் புயலில் சிக்கியுள்ள சிறிலங்கா மக்கள்

அரசியல் புயல். மையம் கொண்டுவிட்டது. இப்புயலில் சிறிலங்காவின் வழிப்பயணம் நிச்சயமற்ற நிலைக்குள்ளாகியிருக்கின்றது. நீதித்துறையுடன் ஆரம்பமாகிய அதிகாரப் போர் பதவிகள் கவிழ்க்கப்பட்டுள்ள நிலையில் இது இன்னும் தீவிரமடைந்து எங்கு போய் முடியும் என்பது கூறமுடியாதுள்ளது. 1978 ஆம் ஆண்டு ஜயவர்த்தன அறிமுகப்படுத்திய அரசியலமைப்பு முறை சிறிலங்காவின் அரசியல் நூல் பந்து போன்ற சிக்கல்பட்ட நிலையிலுள்ளது. தற்போது நடைபெறுகின்ற அதிகாரப் போட்டிக்கும் பதவி கவிழ்ப்புக்கும் காரணமாக அமைவது ஜே.ஆரின் அரசியலமைப்பு முறையே.

2001ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று ரணில் தலைமையிலான ஐ.தே.மு அரசு பதவிக்கு வந்தபின் அது எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை இதுவாகும். சனாதிபதிக்கும் தற்போதைய ஆளும் கட்சிக்கும் இடையேயான கயிறிழுப்புப்போட்டி ஆரம்பமானது. அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பொறுப்பிலிருந்த அபிவிருத்தி லொத்தர் சபையை நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சனாதிபதி சந்திரிகா தன்வசம் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடனேயே அன்று இது தொடர்பான வர்த்தமானியை அச்சடிப்பிப்பது அவருக்கு முடியாமல்போனது. அதனால் அதனை சட்டரீதியாக தம் வசப்படுத்த அவருக்கு முடியாமல் விட்டது.

இன்று அவர் தனது அரசியல் துருப்புக்களை ஒன்றிணைத்துள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முக்கிய ராஜதந்திர நோக்கில் அமெரிக்கா சென்று ஜோர்ஜ் புஷ்சை சந்திக்கும் வேளைபார்த்து சனாதிபதி தமது அதிகாரத்தை நாடிபிடித்துப் பார்க்கும் வகையில் பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொர்பாடல் அமைச்சுக்களை கைப்பற்றும் வகையில் பாதுகாப்புப்படைகளின் துணையோடு வர்த்தமானியை அச்சடிப்பித்து வெளியிட்டுள்ளார். அத்துடன் அச்சகப்பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியை ஆயுதப்படையினரின் துணையுடன் அழைத்துச்சென்று வர்த்தமானியை அச்சடிக்கும்வரை நிறுத்திவைத்து அலுவல்களை கச்சிதமாக நிறைவேற்றியுள்ளார். அதன்படி குறிப்பிட்ட அமைச்சு செயலாளர்களையும் பதவி நீக்கி புதிய செயலாளர்களையும் நியமித்து அமைச்சுப்பொறுப்புக்களைத் தம்வசம்

ரஞ்சித் ஆனந்த ஜயசிங்க
(லங்காதீப)
மொழியாக்கம்: வடிவேல்

ஆக்கியுள்ளார். அத்துடன் கடந்த மூன்றாம் திகதி முதல் வரும் 19ஆம் திகதி வரையான சுமார் இரு வாரங்களுக்கு பாராளுமன்றம் கூடுவதையும் நிறுத்தியுள்ளார். 4ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதியரசர் சரத் என் சில்வாவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசு சபையில் சமர்ப்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்படமுன்னர் பாராளுமன்றம் கூடுவதை சனாதிபதி நிறுத்தியிருக்கிறார். அது அவருக்கெதிரான மேற்படிப் பிரேரணையை சமர்ப்பிக்க முடியாத வகையில் சந்திரிகா செய்த தந்திரமாகும். அதற்கிடையில் சனாதிபதி சந்திரிகாவிற்கு எதிராகவும் நம்பிகையில்லாப் பிரேரணை கொண்டுவரத் திட்டமிட்டிருப்பதும் அறியவருகிறது. அது கொண்டுவரப்பட்டால் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் பறந்துபோகும்.

எப்படியாயினும் தற்போது எழுந்துள்ள பிரச்சினையில் என்ன நடக்குமென மக்கள் எதிர்பார்த்துள்ளனர். சனாதிபதி எடுத்துள்ள இந்த முடிவினால் பல பிரச்சினைகள் எழும்பியிருப்பதைக் கூறுவது பொருந்தும். அதிலும் முக்கிய பிரச்சினையாக இருப்பது அரசின் சமாதான முன்னெடுப்பும் முதன்முதலாக புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால சபை யோசனைகளை அடுத்து எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பேச்சுக்களின் முட்டுக்கட்டையுமாகும். விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த பிரேரணைகள் பெரும்பான் மையான சிங்கள மக்களின் விருப்பைப் பெறாது எனினும் அது பற்றிப் பேச்சுக்கள் நடத்தவே திட்டமிடப்பட்டது.

அதற்கிடையில் சனாதிபதி கண்காணிப்புக் குழுத் தலைவரின் நடவடிக்கைகளில் குறை கண்டு நாட்டைவிட்டு வெளியேறப் பணிக்குமாறு நோர்வே அரசிடம் கோரினார். அதனால் கண்காணிப்புக் குழுவினரின் நடவடிக்கைகளும் விமர்சனத்துக்குள்ளானது. எவ்வாறெனினும் அதுதொடர்பாக இறுதி முடிவு எடுக்கு முன்பு சனாதிபதியின் இந்நடவடிக்கையினால் சமாதான முன்னெடுப்பைத் தொடர்ந்து நகர்த்த முடியாமல் போய்விட்டது. மேலும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும்நிலையில் பாதுகாப்புப்படைகளின் வழிநடத்தலினை ஆளும் கட்சியிடமிருந்து சனாதிபதி தமது வசப்படுத்தியிருப்பதால் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது கேள்விக்குள்ளாகியிருக்கின்றது. 2002ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது விடுதலைப்புலிகளினதும் அரசினதும் பல உடன்பாடுகளுக்கு அமையவே. அரசு உறுதியாகவும் சரியான வழியிலும் யுத்த நிறுத்தத்தைப் பேணுவதாக அப்போது புலிகளிடம் வாக்குறுதியளித்தது. ஆயினும் பாதுகாப்பு அமைச்சை சந்திரிகா கையேற்றநிலையில் தமது வாக்குறுதிகளைப் பேணும் பொறுப்புக்குள்ளாகியிருக்கிறது. மேலும் தற்போதைய நிலையில் முப்படைகளுக்கும் கட்டளையிடும் அதிகாரம் சனாதிபதியிடம் இருக்கின்றது. சிலவேளைகளில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலிகள் மீண்டும் ஆயுதப்படையினரைத் தாக்கும் நிலை ஏற்படின் நாடுமுழுவதும் பிரச்சினை தோன்றலாம் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவைக் கைப்பற்றிய பின்னரும் புலிகளுடன் பேசத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார். எனினும் புலிகள் அதுபற்றிக் கருத்து எதனையும் கூறாதிருக்கின்றனர்.

எதைச் சொன்னாலும் அவருக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கிடையாது. எனவே தற்போது செய்யப்படவேண்டிய வைத்தியம் சமாதானம் அல்ல. புலிகள் தலைநகரையோ, அல்லது வேறு எந்தக் கேந்திர நிலைகளைத் தாக்கினாலும் பதில் சொல்லவேண்டியது சந்திரிகாவே. அன்றியும் பங்குச்சந்தை, உல்லாசப் பயணத்துறை என்பவற்றின் வீழ்ச்சி உட்பட பலவற்றிற்கு அவர் பதில்சொல்ல நேரிடும். எனினும் அவை தீர்மானிக்கப்படவேண்டியது புலிகளின் நடவடிக்கைகள் மூலமே.

சமாதானம் ஒருபுறமிருக்க அடுத்த பிரச்சினை நாட்டின் பொருளாதாரம் 2004ஆம் ஆண்டுக்கான அரசினால் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு செலவுத்திட்டப் பிரேரணைகள் எதிர்வரும் 12ஆம் திகதி அரசினால் சமர்ப்பிக்கமுடியாத நிலையில் உள்ளது. அதனால் அரச ஊழியருக்கு வழங்கப்படவிருந்த சம்பள அதிகரிப்பு ஓய்வூதியம் பெறுவோருக்கான கொடுப்பனவு அதிகரிப்பு, விவசாயிகளுக்கான உர மானியம், மற்றும் மக்களுக்கு வழங்கப்படவிருந்த பல நன்மைகள், ஜப்பான் நிதி உதவி மூலம் திட்டமிடப்பட்டிருந்த பாரிய அபிவிருத்திப்பணிகள் இவையொன்றும் அரசினால் செய்வதற்கு இடமின்றிப் போகிறது. இது பெரும் இக்கட்டான நிலைமையாகும். கடந்த இருவருடங்களாக ஏற்பட்டிருந்த சமாதான நடவடிக்கை காரணமாக பல நன்மைகள் மக்களுக்குக்கிடைக்கும் தறுவாயில் அதனைத்தடுக்கும் வகையிலான அரசியல் நடவடிக்கைகளும் நோக்கங்களும் ஏற்பட்டுள்ளன. எவ்வாறெனினும் வரும் 19ஆம் திகதி மீண்டும் நாடாளுமன்றம் கூடுவது. இவை பற்றியமுடிவு ஒன்றிற்கு வர நேரிடும். பாதுகாப்பு, உள்துறை அலுவல், ஊடகம் ஆகிய முக்கிய அமைச்சுக்கள் இன்றி சமாதானத்தை முன்னெடுக்க முடியாது என்பது அரசின் கருத்து. எனவே மீண்டும் மக்களின் கருத்தைக்கோரும் நிலை தோன்றும். அதன் அர்த்தம் மீண்டும் பொதுத்தேர்தல், பொதுத் தேர்தல் நடத்துவதாயின் சனாதிபதி பாராளுமன்றைக் கலைக்கவேண்டும். அரசு விரும்பினால் பாராளுமன்றைக் கலைக்க சபை அனுமதியைப் பெறலாம். அதேபோல சனாதிபதி பாதுகாப்பு, ஊடகத்துறை, உள்நாட்டலுவல்கள் தொடர்பாகக் கொண்டுவரும்




எந்தவொரு பிரேரணையையும் அரசு தோல்வியுறச் செய் யலாம். இவையாவும் சகஜமான அரசியலைக் கொண்டு நடத்த இடையூறாக இருக்கும். சனாதிபதி 19ஆம் திகதி வரையான சபை ஒத்திவைத்த இருவாரங்களுள் ஐ.தே. உறுப்பினர் சிலரைத் தம்பக்கம் இணைத்து புதிய அரசொன்றை அமைக்க முடியுமா என்றும் முயன்று வருகின்றார். அதற்கிடையில் அரசிற்கு தமிழர் கூட்டமைப்பு உள்ளிட்ட பல சிறுபான்மைக்கட்சிகள் ஆதரவளிக்க முன்வந்துள்ளன. இதனால் பாராளுமன்றில் சனாதிபதிக்கு பெரும்பான்மைப்பலம் கிடைக்கும் என்பதும் கேள்விக்குறியே.

எவ்வாறாயினும் அரசினால் வரவுசெலவுத் திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்படாதவிடத்து அரசிற்கும்-சனாதிபதிக்குமிடையிலுள்ள முறுகல்நிலை தீவிரமடைந்து தேர்தல் வரை செல்லும் நிலைக்குத் தள்ளப்படலாம். அந்த வகையில் அடுத்தவருடம் இரு தேர்தல்களை மக்கள் சந்திக்கநேரிடும். சனவரி முதல் யூன் வரை மாகாண சபைகளுக்கான தேர்தல். அடுத்தது பொதுத்தேர்தலுக்கான அறிகுறிதோன்றும். அவ்வாறு பொதுத்தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்க நேர்ந்தால் நாடு பெரும் பொருளாதாரப் பிரச்சினைக்குள்ளாகும். அரசு பெற்றுக்கொள்ளும் 45ஆயிரம்கோடி ரூபா நிதி கிடைக்காமல் விடலாம். அத்துடன் அக்கடன் சமாதானத்தின் விளைவாக கிடைக்கவிருந்தது அந்நிதியின் மூலம் ஆளும் கட்சி நாட்டை "மீண்டும் மலரச் செய்வோம்" என்ற திட்டத்தை அமுலாக்க திட்டமிட்டது.

சனாதிபதி அமைச்சுக்களை பொறுப்பேற்கும் வேளையிலும் முதலீடு செய்ய வருகை தந்திருந்த வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அன்றே நாடு திரும்பி விட்டது. பங்குச் சந்தையும் 3 மணித்தியாலயங்களில் 100 விழுக்காடு வீழ்ச்சியடைந்தது. ரூபாயின் பெறுமதியும் வீழ்ச்சியடையும் என பொருளியல் நிபுணர்கள் கருதுகின்றனர் இந்நாட்டுக்கு வருகைதரவிருந்த 5 லட்சத்து 20 ஆயிரம் உல்லாசப் பயணிகளின் வருகையும் தடைப்படுவதற்கு இடமுண்டு இவையனைத்தையும் தீர்மானிக்கும் பொறுப்பு தலைநகரில் இருந்து 250 கி.மீ தொலைவிலுள்ள வன்னியிலிருக்கும் புலிகளிடம் இருக்கிறது அவர்கள் சனாதிபதி எடுத்துள்ள முடிவுக்கு எதுவித கருத்தும் வெளியிடவில்லை. தேர்தல் ஒன்று ஏற்படுமாயின் 2004 மார்ச் வரை அரசியலில் ஸ்திர நிலை இருக்காது சனாதிபதிக்கு வரவு செலவுத் திட்ட நிதி இல்லாவிடினும் அரசியல் அமைப்பின் 150 (3) வது பிரிவின் கீழ் தேர்தல் சூழ்நிலையிலும் தேவையான நிதியை அடிப்படை திட்டமிடல் ஒன்றிணைப்பு நிதியிலிருந்து பணத்தைப் பெற முடியும் எனினும் இரு தேர்தலுக்காகவும் அரசு 200 கோடி ரூபாவிற்கு மேல் செலவிட நேரிடும்.

சனநாயகப் போட்டி தீவிரமடையும் வேளை இவ்வாறான நிலை ஏற்படலாம் முக்காலங்களையும் சிந்தித்து ஜே.ஆரினால் உருவாக்கப்பட்ட தற்போதைய அரசியலமைப்பு முறையால் நாட்டு மக்கள் ஒன்றிரண்டு முறையல்ல ஏழு தடவை இவ்வாறான துன்பத்துக்குள்ளாகியுள்ளனர் எதிர்கட்சி ஸ்தானத்தில் இருந்த அனைத்து கட்சிகளும் தாம் பதவிக்கு வந்தவுடன் ஜே.ஆரின் அரசியலமைப்பை நீக்குவதாகக் கூறின. எனினும் பதவிக்கு வந்ததும் கூடிய அதிகாரங்களுடன் சுக போகங்களை அனுபவிக்கின்றன.

தற்போது முதன் முதலாக நிறை வேற்று அதிகாரமுடைய சனாதிபதியும் ஆளும் கட்சியும் மோதுகின்றன. நாட்டில் அக்கறையுள்ளோர் தற்போதாவது ஜே.ஆரின் அரசியலமைப்பை நீக்கி விட்டு சரியான அரசியல் கலாச்சாரத்தை தோற்றுவிக்க உறுதிபூணவேண்டும் அதற்கு அரசியல் வாதிகளுக்கு அதிகாரத்துடன் கூடிய மூளையும் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

## பயிர்ச் செய்கைக்கு மானியம் வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

முள்ளியவளை ஒடடுசுட்டான் பிரதேசங்களில் 03.04ற்கான கால போகப் பயிர்ச்செய்கைக்காக மானியம் வழங்கப்பட்டுள்ளது.

எக்கோ கெயர் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவுடனும் முல்லை அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தால் 275 பயனாளிகளுக்கு நெற்செய்கைக்கும், சிறுதானியச் செய்கைக்கும் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பேராறு, பண்டார வன்னி வித்தியாபுரம், புளியங்குளம் ஆகிய கிராமங்களில் 155பேருக்கும் முள்ளியவளைப் பிரதேசத்தில் கே. ப்பாப் புலவு முள்ளியவளை மேற்கு, வடக்கு, கணுக்கேணி மேற்கு, கிழக்கு மாமூலை ஆகிய பகுதிகளில் 120பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இவ் மானியத்தில் நெற்செய்கைக்கு தலா ரூ.9000 வீதமும், சிறுதானியப் பயிர்ச் செய்கைக்கு தலா ரூ.4500 வீதமும் வழங்கப்பட்டுள்ளது. என முல்லை அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன் தெரிவித்தார்.(05)

## புனரமைப்பு

திருகோணமலை ஆதார வைத்தியசாலையின் பிரசவ அறை பல வசதிகளுடனும் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. இதற்கென 2,75,000ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைககு குறைந்தளவு 13 பிரசவங்கள் பார்க்கப்படு வதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் சுகாதார திணைக்களத்தின் நிதியுதவியினால் பழைய அறுவைச் சிகிச்சை அறை புனரமைக்கப்பட்டுள்ளது. இதற்கு திணைக் களம் ஆறுஇலட்சம் ரூபாவை ஒதுக்கிக் கொடுத்திருந்தது.

## காலபோக நெற்செய்கையை பாதுகாக்க வேண்டுகோள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, முள்ளியவளை ஆகிய பகுதிகளில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு பயிர்கள் வளர்ந்துள்ள நிலையில் கால்நடைகளைக் கட்டி வைத்துப் பராமரிக்குமாறு, முள்ளியவளை கமநல சேவை நிலையமும், மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டப் பொறுப்பாளரினாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 31.10.2003ல் இருந்து கால்நடைகளைக் கட்டி வைத்துப் பராமரிக்குமாறு அறிவிக்கப்பட்டும் இதுவரை எந்த மாற்றமும் நிகழவில்லையெனவும், இதனால் கால போகப் பயிர்கள் அழியும் நிலை தோன்றியுள்ளதாகவும்,இவற்றைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருமாறும் இப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (20)

# "இந்து" - ஜெயலலிதா மோதல் — அ.தி.மு.க.வின் ஆட்சிக்குப் பின்னடைவு

தமிழகத்தில் ஆளும் ஜெயலலிதா தலைமையிலான அண்ணாதிராவிட முன்னேற்றக்கழக அரசாங்கத்திற்கும் பத்திரிகையாளர்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழக சட்டப் பேரவை இரு பத்திரிகை நிறுவனங்களைச் சேர்ந்த ஆறுபத்திரிக்கையாளர்களைக் கைது செய்யும் உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் முதல்வர் ஜெயலலிதாவின் கொடும்பாவியை எரிக்கும் அளவிற்கு இருபகுதியினருக்குமிடையிலான முறுகல் நிலை முற்றியுள்ளது.

ஒரு நாட்டிலுள்ள பத்திரிகைகளில் ஒருசாரார் ஆளும் வர்க்கத்திற்கு சார்பான போக்கையும், ஒருசாரார் எதிர்க் கட்சிகளுக்குச் சார்பான போக்கையும், ஒரு சாரார் நடுநிலைமைப்போக்கையும் கொண்டிருப்பர். எதிர்க்கட்சிகளுக்குச் சார்பான போக்கைக் கொண்ட பத்திரிகைகள் எப்போதும் ஆளும் வர்க்கத்தைகுறை பிடிப்பதிலும் விமர்சிப்பதிலும் கண்ணாக இருப்பர். ஆளுங்கட்சிக்குச் சார்பானவர்கள் ஆளும் வர்க்கத்தின் செயற்பாடுகளை சாதனைகளாகக் காட்ட முற்படுவர். ஆனால் தமிழகத்தில் ஜெயலலிதா அரசாங்கத்திற்கும் முரசொலிப் பத்திரிகைக்கும் ஏற்பட்டுள்ள முரண்பாட்டை எதிர்க் கட்சியினரின் பத்திரிகை என்று பார்த்தாலும் இந்துப் பத்திரிகையின் முரண்பாடு என்பது முற்றிலும் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. இவர்கள் இரு பகுதியினருக்கும் இடையில் ஒற்றுமைகள் பல உண்டு. இந்த ஒற்றுமை இலட்சியங்களை மீறியதாக இந்த முரண்பாடு ஏற்பட்டுள்ளதுதான் இங்கு முக்கியமானதாக நோக்கப்படுகின்றது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சட்டப் பேரவையில் நடந்து கொள்ளும் விதம் குறித்தும் அவரது செயற்பாடுகள் குறித்தும் "இந்து" பத்திரிகையின் சென்னைப்பதிப்பில் செய்தி வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தச் செய்தியை நியாயப்படுத்தும் வகையிலும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சட்டப் பேரவையில் நடந்து கொள்ளும் விதம் அரசியல் நாகரிகத்திற்கு புறம்பானது என்ற வகையிலும் ஆசிரிய தலையங்கம் வரையப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து இதை மொழி பெயர்த்து தி.மு.க.வின் அதிகாரபூர்வ பத்திரிகையான முரசொலி பிரசுரித்திருந்தது. இதனையடுத்து சீற்றங்கொண்ட ஜெயலலிதா கோபம் கொண்ட பாம்பாக சீறிப்பாய்ந்துள்ளார். இந்த முரசொலி பத்திரிகை சட்டப் பேரவையின் மாண்பைக் குலைந்துவிட்டுள்ளதோடு அதன் உரிமையையும் மீறியுள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதன் அடிப்படை யில் இந்துப் பத்திரிகையின் ஆசிரியர் ராம் நிர்வாக ஆசிரியர் வெளியீட்டாளர் மற்றும் இரு செய்தியாளர்கள் அத்துடன் முரசொலியின் ஆசிரியர் செல்வம் ஆகிய ஆறு பேரையும் கைது செய்து பதினைந்து நாட்களுக்கு சிறையில் அடைக்கு மாறு சட்டப்பேரவை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இக்கைது உத்தரவைக்கண்டித்து பல்வேறு அரசியல் கட்சிகள், பத்திரிகையாளர்கள் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவாக டில்லியில் உள்ள பத்திரிகை ஆசிரியர்களும் சட்டப் பேரவையின் உத்தரவை கண்டித்துள்ளனர்.

08-11-2003 அன்று சென்னையில் கூடிய பத்திரிகையாளர்கள் ஒரு நாள் உண்ணாவிரதப்போராட்டத்தையும் நடத்தியுள்ளனர். ஜெயலலிதாவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டுள்ளது. இப்பத்திரிகையாளர்கள் ஆறு பேரில் எவராவது கைது செய்யப் பட்டால் அனைத்துப்பத்திரிகையாளர்களும் சிறைசெல்வது என்றும் தீர்மானித்துள்ளனர். இது வரை சம்பந்தப்பட்ட எவரும் கைதாகவில்லை. ஆனால் இவர்களைக்கைது செய்ய சிறப்புக்காவல்துறை குழு ஒன்று அமைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்படுகிறது. இவர்கள் பெங்களூரில் மறைந்திருப்பதாக எண்ணி இக்காவல்துறை அணி பெங்களூர் சென்றிருக்கிறது.

ஜெயலலிதாவின் அராஜகப்போக்கைக்கண்டித்து தமிழகம் முழுவதும் திராவிடமுன்னேற்றக்கழகம் மனிதச் சங்கிலிபோராட்டத்தை நடத்தவுள்ளது. இதனை அறிவித்துள்ள திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு.கருணாநிதி ஜெயலலிதாவின சர்வாதிகார ஆட்சியினை அனைத்துத்தரப்பினரும் ஒன்றிணைந்து எதிர்க்கவேண்டிய தருணம் வந்துவிட்டது என்று கூறியுள்ளார்.

**செல்மன்**

ஒரு பத்திரிகையில் வெளிவந்த ஆக்கத்தை வேறொருபத்திரிகை மறு பிரசுரம் செய்யும்போது அந்த ஆக்கத்திற்குரிய முழுப்பொறுப்பையும் முதலாவது பத்திரிகையே எடுத்துக் கொள்கிறது. சட்டப்படி இரண்டாவது பத்திரிகைமீது அதாவது மறுபிரசுரம் செய்த பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால் ஜெயலலிதா அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

முரசொலி பத்திரிகை நிர்வாகம் எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக்கழகத்தின் கீழ் இருப்பதால் அரசு அவ்வாறு நடந்து கொண்டிருக்கிறது என்று எண்ணத்தோன்றுகிறது. "இந்து" பத்திரிகையைப் பொறுத்து ஜெயலலிதாவின் பின்னணியும் இந்துப்பத்திரிகை நிர்வாகமும்ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே ஆனால், ஒன்றுக்குள் ஒன்று என்று பாராமல் இந்து ஜெயலலிதாவின் மடியில் கைவைக்க முற்பட்டதால் வந்தது வினை.

இவர்கள் முழு இந்தியாவிற்குமே ஆலோசனை கூறி வருபவர்கள் முட்டுப்படக்கூடாதவர்கள், ஆனால், ஏனோ முட்டுப் பட்டுவிட்டனர். இதன் மூலம் உள்வீட்டு விவகாரங்கள் வெளியில் அள்ளியெறியப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

இது ஒருபுறமிருக்க ஜெயலலிதாவின் ஆட்சி எதிர்கொள்ளப் போகும் அடுத்த பின்னடைவு என்றும் இச்சம்பவத்தைக் கூறலாம். அண்மையில் 'பொடோ' சட்ட மறு ஆய்வுக்குழு குறித்து



மத்திய அரசு பிறப்பித்த புதிய ஆணை அதாவது, மாநில அரசுகளின் மறு ஆய்வுக்குழுவின் தீர்ப்பை மத்திய அரசின் மறு ஆய்வுக்குழுவின் தீர்ப்பு மேவி நிற்கும் இந்தப் புதிய ஆணையானது. ஜெயலலிதா தனது அரசியல் எதிரிகள்மீது 'பொடோ' சட்டத்தை வைத்து வஞ்சம் தீர்க்கும் எண்ணத்திற்கு வீழ்ந்த அடியாகவே கொள்ளவேண்டும். இதைத் தொடர்ந்து எழுந்த இந்தப் பத்திரிகையாளருடனான மோதல் பத்திரிகைகளை மிரட்டி கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் எண்ணத்திற்கு வீழ்ந்த அடியே.

இந்தப் பத்திரிகையாளர்கள் ஆறுபேரும் தமிழகக் காவல்துறையால் கைதுசெய்யப்பட்டால் அவர்களுக்கு நீதி வழங்கவேண்டிய பொறுப்பு நீதிமன்றுக்கு ஏற்படும். அப்போது தமிழக பத்திரிகைச் சுதந்திரத்தைக்காக்க வேண்டியது நீதிமன்றின் கையில் தான் இருக்கின்றது என்ற ஓர் நிலையும் ஜெயலலிதாவின் ஆட்சியில் தமிழகத்திற்கு ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் அக்டோபரில் 16,635 பேருக்கு சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த அக்டோபர் மாதம் 16,635 நோயாளர்களுக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இதில் திலீபன் மருத்துவமனைகள் மாங்குளத்தில் 1417பேரும், ஐயன்குளத்தில் 1229பேரும், கற்சிலை மடுவில் 4870பேரும், அளம்பிலில் 1267 பேரும், பூநகரியில் 1405பேரும், ஆளியவளையில் 1363 பேரும், கறுக்காய்க்குளத்தில் 975பேரும், நைனாமடுவில் 598பேரும், நெடுந்தீவில்1129பேரும், புளியங்குளத்தில் 1376பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேலும் இவற்றுள் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் வைரஸ் காய்ச்சலினால் 2045பேரும், சுவாசப் பாதைத்தொற்றினால் 2481 பேரும், தோல்நோயினால் 1103 பேரும், கடற்புழுத்தொற்றினால் 1315 பேரும், நாரிக்குத்தினால் 1900பேரும் காயங்களினால் 1235 பேரும்ஆவர்.

அத்தோடு திலீபன் நடமாடும் மருத்துவசேவையால் 3364 நோயாளர்களுக்கும் சிகிச்சை வழங்கப்பட்டது. மேலும் திலீபன் மருத்துவ சேவையினரால் மருத்துவநிலையங்களை அண்டியுள்ள பகுதிகளுக்கு சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டல் என்பதும் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

# தேசியப் பாடசாலைகளில் ஆசிரிய இடமாற்றங்களில்லை

## ஆசிரிய சங்கங்கள் ஆட்சேபனை

தேசியப் பாடசாலைகளுக்கான ஆசிரிய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படாமைக்கு ஆசிரிய சங்கங்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளன.

ஆசிரியர்கள் தமக்கு விருப்பமான இடங்களுக்கு வருடாந்தம் பெறும் இடமாற்ற உரிமைகளை இது மீறுவதாக இது அமைந்துள்ளதாக ஆசிரியர் சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

ஆசிரியர்கள் தலைநகருக்கு வந்து உயர் கல்வியைப் பெறுவதையும் இந் நடவடிக்கை மூலம் அவர்கள் இழந்திருப்பதாக இலங்கை சுதந்திர ஆசிரிய சங்கத்தின் செயலாளர் சரத் கலகல்ல கூறியுள்ளார்.

எனினும் அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளதும் விருப்பத்திற்கிணங்கவே இந்த இடமாற்றங்கள் செய்யப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# படையினர் பாவனையில் பொதுக்கிணறுகள் நெடுந்தீவில் பொதுமக்கள் பெரும் அவலம்

நெடுந்தீவிலுள்ள மணல் கிணறுப் பகுதியில் உள்ள பொதுக்கிணறுகளை அப்பகுதி முகாம்களில் தங்கியுள்ள படையினரும் பொலிசாரும் பாவித்து வருவதால் அப்பகுதி மக்கள் அவற்றைப் பாவிப்பதற்கு பெரும் அவஸ்தைப்பட்டு வருகின்றனர்.

உவர்நர் கிணறுகள் உள்ள இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் குடிநீர் தேவைகளுக்காக உதவும் அமைப்புக்களால் நிறுவிக் கொடுக்கப்பட்ட இந்நன்னீர் கிணறுகளை இப்பகுதியில் தங்கியுள்ள படையினரும் பொலிசாரும் குளிப்பதற்காகவும் உடைகள் கழுவவும் பயன்படுத்தி வருவதால் அங்கு சென்று நீரள்ள முடியாது பெண்கள் அவஸ்தைப் பட்டு வருகின்றனர். (33)

# மனித உரிமைகள் குறித்த புதிர்ப் போட்டியில் தெரிவு

(முள்ளியவளை)

மனித வள உரிமைகள் இயைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய மட்ட மனித உரிமைகள் தொடர்பான "புதிர்" போட்டியில் வித்தியானந்தாக் கல்லூரியும் தெரிவாகியுள்ளது.

மேற்படி போட்டியானது கடந்த 30 ஆம் திகதி அன்று கொழும்பில் நடைபெற்றுள்ளது இப் போட்டியில் சகல மட்டங்களையும் உள்ளாக்கிய 25 பாடசாலைகள் பங்கு கொண்டு அதில் 12 பாடசாலைகள் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது. மேற்படி 12 பாடசாலைகளில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியும் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது. (ஆ)

# அரசியல் நிலைமைகள் பற்றி த. வி. கூ. உயர்பீடம் ஆராய முடிவு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் உயர்பீடம் தற்போதைய அரசியல் நிலைமைகள் பற்றி ஆராய்வதற்காக அடுத்த சில தினங்களுக்குள் கூடவுள்ளது.

தாமதம் இன்றி இந்தக் கூட்டத்தைக் கூட்டவுள்ளதாக கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் கூறியுள்ளார்.

சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி இப்பொழுது மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

சனாதிபதியின் உரை குறித்து கூட்டணியின் நிலைமையை விளக்க கூட்டணியின் செய்திக் குறிப்பொன்று விரைவில் வெளிப்படும் என்றும் கூறியுள்ளார்.

# சிறிலங்கா-பிரான்ஸ் நட்புறவு கழக கிளை மீண்டும் திறப்பு

யாழ். மாவட்டத்தில் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் சிறிலங்கா பிரான்ஸ் நட்புறவுக் கழகத்தின் கிளை மீண்டும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

குடா நாட்டில் இடம் பெற்ற போர் நடவடிக்கையினால் சிறிலங்கா பிரான்ஸ் நட்புறவுக் கழகமும் சேதமடைந்தமையைத் தொடர்ந்து இந்த நிறுவனம் செயலிழந்து இருந்தது.

தற்போது இக் கழகப் பணிகள் மீண்டும் எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

# குடாநாட்டு அகதி முகாம்களில் வாழும் 45 ஆயிரம் மக்கள் மழையால் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ்.குடா நாட்டில் பெய்து வரும் அடைமழை காரணமாக இங்குள்ள 80ற்கு மேற்பட்ட அகதி முகாம்களில் வசித்து வரும் 45 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பெரும் அவலங்களை அனுபவித்து வருகின்றனர்.

இராணுவ உயர் பாதுகாப்பு வலய நடைமுறைகளால் தம் சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாது அடிப்படை வசதிகள் அற்ற இம் முகாம்களில் தங்கியுள்ள இவர்கள் மலசல கூடங்கள், சேப்பனிடப்பட்ட கூரைகள் அற்ற வதிவிடங்களில் வசித்து வருவதால் இவ் அவல நிலை தோன்றியுள்ளது.

இந்த அவலநிலையால் தோன்றியுள்ள சுகாதார சீர்கேடுகள், தொற்று நோய்கள் பரவும் அபாயங்கள் தோன்றியுள்ளது. (33)

# வவுனியாவில் மாணவர் மத்தியில் நிலவும் ஒழுக்கச் சீர்கேடு வேதனையளிக்கிறது

## -மாவட்ட நீதவான் இளஞ்செழியன்

(செட்டிகுளம்)

**போர் காரணமாக அதிகமாகப் பாதிப்புற்றிருந்த மாவட்டம் வவுனியா. எனினும் இன்று சமாதான சூழ்நிலையிலும் மாணவர்கள் மத்தியில் நிலவுகின்ற ஒழுக்கச் சீர்கேடு வேதனையானது என்று வவுனியா மாவட்ட நீதவான் இளஞ்செழியன் வவுனியா நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் ஆசிரியர்களுடனான சந்திப்பில் தெரிவித்தார்.**

சில கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்களால் மோசமான முறையில் 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் மத்தியில் சொற்பிரயோகம் மேற்கொள்ளப்படுவதாக எனக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. இனிமேல் இவ்வாறான முறைப்பாடு எனக்கு கிடைக்கப்படும் என்றால் சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவார்கள், நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும், அது மட்டும் அன்றிக் கல்வி நிறுவனமும் சீல் வைக்கப்படும்.

மாணவர்களினை நல்ல வழிக்கு இட்டுச் செல்ல வேண்டிய கல்விச் சமூகம் ஏன் இவ்வாறு செய்கின்றனர் என்பது கவலைக்குரிய ஒன்று. இவ்வாறு செய்யும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனைவிடக் குழுவாக நின்று பெண்களினைக் கேலி செய்பவர்கள், கூட்டம் கூடுபவர்களும் விரைவாகக் கைது செய்யப்படுவர். அத்துடன் ஆட்டோச் சாரதிகள் தொடர்பான முறைப்பாடு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் இளஞ்செழியன் மேலும் தெரிவித்தார். (21)

## பனம் விதை நடுகை

மாவீரர் தினத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்கமைப்பின் கீழ் 05 ஏக்கர் காணியில் பண்ணைத் திட்டமாக 5000 பனம் விதைகள் நடுகை மேற்கொள்ளப்படுகிறது. (26)

# மழைநீர் அகற்ற வடிகால் அமைப்பு

பருவமழை காரணமாக புதுக்குயிருப்புப் பரந்தன் வீதியில் மழை நீர் அனைத்தும் மாவீரர் மண்டபத்தின் முன்னால் தேங்கி நிற்கின்றது.

இதனால் மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தி வந்ததினால் சனியன்று வீதியோரம் அகழப்பட்டு நீர்வடிகால் (வோக்) அமைக்கப்பட்டுச் சீர்செய்யப்பட்டது.

தற்போது இவ்விடத்தில் நீர் தேங்கி நிற்காது செல்வதையும் மக்கள் சிரமமில்லாமல் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. (26)

# குடாநாட்டு விளைநிலங்களில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்ற படையினருக்கு நிர்ப்பந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு விளைநிலப் பரப்புக்களில் படையினரால் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றி அதில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய அனுமதி வழங்குமாறு யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன் படைத்தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் குடாநாட்டு விவசாய நிலப்பரப்புக்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்டு அதனைத் தம்மிடம் ஒப்படைக்கும் நடவடிக்கையை படைத்தரப்பு மேற்கொள்ளாததால் தம் விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைவதாக யாழ் மாவட்ட விவசாயிகள் அரச அதிபரிடம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# பருவமழை காரணமாக பாலம் அமைப்பதில் தாமதம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளை கோப்பாபுலவு வீதியில் உள்ள பலகைப் பாலங்கள் அனைத்தும் சேதம் அடைந்த நிலையில் காணப்பட்டதால் திருத்துவதற்காக எடுத்த முயற்சி பருவமழை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இவ்வீதியால் மக்கள் பல துன்பங்களுக்கு மத்தியிலேயே பயணம் செய்யக் கூடியதாக இருப்பதாகவும், வயல் வெளியில் பாதை மிக மோசமாகச் சேதம் அடைந்துள்ளது எனவும், இதனால் பேருந்துக்கள் பல முல்லைத்தீவு சென்றே முள்ளியவளை செல்வதாகவும், இதனால் குறித்த நேரத்திற்குள் வேலைகளுக்குச் செல்ல முடியாத நிலை இருப்பதாகவும், இப்பாதை யால் பயணிக்கும் பயணிகள் தெரிவித்தனர். (20)

## ஒளிவிழா

(முள்ளியவளை)

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் கல்லூரி அதிபர் கே.பி கணேஸ் தலைமையில் கடந்த புதனன்று ஒளிவிழா சிறப்பாக நடைபெற்றது.

மேற்படிக் கல்லூரியின் கேட்போர் கூட மண்டபத்தில் மு.ப 9.30 மணிக்கு ஆரம்பமாகிய மேற்படி நிகழ்வில் முல்லைத்தீவுப் பங்குத்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கியமையடுத்து மாணவர்களின் நாடகங்கள், பாட்டு, பட்டிமன்றம், கவிதை என்பன இடம் பெற்று நிகழ்வு நிறைவானது. (ஆ)

## வாகனம் மீது தாக்குதல்

முகமாலையிலிருந்து நெட்டாங்கண்டல் பகுதிக்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற தட்டிவான் ஒன்று கடந்த வியாழக்கிழமை இரவு நெட்டாங்கண்டல் மருத்துவ மனையருகே தாக்குதலுக்குள்ளானது.

இரவு 8.00 மணியளவில் சிலரால் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன் போது வானில் எவரும் இருக்கவில்லை.தாக்குதலால் தட்டிவான் சேதமடைந்தது. இதுகுறித்து உரிமையாளர் துணுக்காய் காவல் பணி மனையில் முறையீடு செய்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த காவல் துறையினர் சந்தேக நபர்களைக் கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (24)

## அதிபர்கள் கவனத்திற்கு!

க.பொ.த (சா.த)பரீட்சை 2003 பாடசாலை மட்டக் கணிப்பீடு இறுதிப் புள்ளிப் பட்டியல் பூரணப்படுத்தல் தொடர்பான கூட்டம் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபருடன் உதவி அதிபர் அல்லது பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்குப் பொறுப்பான சிரேஷ்ட ஆசிரியர் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.


## 31ஆவது நாள் நினைவுகள்



அன்னை மடியில்
09-08-1940

ஆண்டவன் மடியில்
11-10-2003

அமரர்
**திரு.இராசையா யோகேஸ்வரன்**
ஓய்வுபெற்ற உபதபால் அதிபர்
(பதிவும்: வட்டாரம், மு. புதுக்குடியிருப்பு)

ஓய்வுகண்ட உபதபாலதிபர் ஆய்வுகண்ட அறிவாளர்
ஓய்ந்துவிட்டார் மண்ணிலின்று தோய்ந்திடுங் கவலைதர
சாய்ந்திடும் நீதியற்ற சரித்திரம் தனைக் கண்ட
ஆய்ந்தெடுத்த அதிபருக்கு ஆயிரம் வணக்கங்கள்.

யோகங்கள் பல பெற்ற யோகேஸ்வரனின் ஆன்மா
யாகம் பல செய்ததால் ஆகுமெழில் மோட்சமென்றும்
தாகம் தீர்த்த வானப்புகழ் தரணியில் வாழ வேண்டி
யாகம் பண்ணப் பரமசிவன் பாதாரம் வேண்டுகிறோம்.

குடும்பத்தினர்
10 ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(3857)



## சேரன் வாணிபம்

### ஊர்தி ஓட்டுநர் பயிற்சிநெறிக்கான வேண்டுகை

எமது வாணிபத்தினால் மேற்கொள்ளப்படும் ஊர்தி ஓட்டுநர் பயிற்சி நெறிக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

1. வயது 21 - 28ற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. உயரம் 5' 3"ற்கு மேல் இருத்தல் வேண்டும்.
3. எடை 53 கிலோவிற்கு மேல் இருத்தல் வேண்டும்.
4. ஆண்டு 08 வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
5. வன்னிப் பெருநிலப்பரப்பில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை உடையோர் கீழ்க்காணும் முகவரிக்குத் தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை, கல்விச்சான்று என்பவற்றுடன் 2003-11-14 நாளன்று காலை 10.00 மணிக்கு நேரில் சமூகம் தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

நடுவப் பணியகம்,
சேரன் வாணிபம்,
கிளிநொச்சி.

(சி 8697)



## முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரிகளின்

(பதிவு இல- வைபா/கஅ/பண்/முள்ளி/120/2001)

### 05 ஆம் ஆண்டு நிறைவையொட்டி

சித்திர வடிவமைப்புப் பிரிவினர் நடாத்தும்
மண்ணையும் மக்களையும் பிரதிபலிக்கும்

### ஓவியப் போட்டி-2003

முதலாம் பரிசு - 8000/= (சான்றிதழுடன்)
இரண்டாம் பரிசு - 5000/= (சான்றிதழுடன்)
மூன்றாம் பரிசு - 3000/= (சான்றிதழுடன்)

* இலைமறை காயாய் இருக்கின்ற கலைஞர்களை வெளிக்கொணர இப் போட்டி நடாத்தப்படுகின்றது.
* 15 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களும், திறந்த போட்டியாளர்களும் பங்கு பற்றலாம்.
* ஓவியங்கள் விரும்பிய வர்ண ஊடகங்களைப் பயன்படுத்தி, விரும்பிய வரை தாள்கள் மட்டைகளைப் பயன்படுத்தி, நீளம் 36 அங்குலம் அகலம் 24 அங்குல அளவில் வரையப்பட்டு இருக்க வேண்டும்.
* எமது மண், மக்கள், கலை, கலாச்சாரம் என்பன கருப்பொருளாக அமைந்திருக்க வேண்டும்.
* ஓவியத்தின் பின் புறத்தில் பெயர், விபரங்கள் தெளிவாகக் குறிக்கப்பட்டு, பாடசாலை மாணவராயின் அதிபரும், திறந்த போட்டியாளராயின் ஓவிய ஆசானும் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.
* ஓவியங்களை முல்லை மாவட்ட நுண்கலைக்கல்லூரி, முள்ளியவளை, முல்லைத்தீவு அல்லது முல்லை மாவட்ட நுண்கலைக்கல்லூரி புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு 25-12-2003 க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

நிர்வாகம்,
தமிழீழ நுண்கலைக்கல்லூரிகள்

(3860)

## சிந்தனைக்கு



வீர சுதந்திரம் வேண்டிநிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 10-11-2003


## இணங்கப்போவதில்லை

தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுத்துள்ள கோரிக்கை ஐக்கிய தேசிய கட்சியினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. சனாதிபதியால் பறிக்கப்பட்ட மூன்று அமைச்சுக்களை மீள ஒப்படைக்கும் வரையில் பேச்சிற்கே இடமில்லை என்பது ஐ.தே.கட்சியின் நிலைப்பாடாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தேசிய அரசிற்கான கோரிக்கையானது, தற்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாக முன்வைக்கப்பட்டது என்பது வெளிப்படையானது. ஒரு புறத்தில் இன்று உடனடியாக பொதுத் தேர்தல் ஒன்றை எதிர் கொள்ளும் நிலையில் பொதுசன ஐக்கிய முன்னணி இல்லை என்பது.. அதாவது தேர்தல் ஒன்றுவரின் அதில் வெற்றிகொள்ளமுடியாது என்பது.அடுத்ததாக,அமைச்சுக்கள் பறிப்பால்எழுந்துள்ள எதிர்ப்புணர்வைச் சீர் செய்வது.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் ஐ.தே.கட்சி சனாதிபதியின் தேசிய அரசு கோரிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என்பதும் ஏற்கனவே தெரிந்ததொன்று. ஒருபுறத்தில் பொ.ஐ.முன்னணியுடன் அனுசரித்த போக்கை கடைப்பிடிக்க அவர்கள் என்றுமே தயாராக இருந்தது இல்லை. இரண்டாவதாக,தற்போதைய சூழ்நிலையில் மக்கள் முன்செல்ல அவர்கள் தயாராகவே உள்ளனர். அதாவது தேர்தல் ஒன்றை எதிர் கொள்ள அவர்கள் தயாராக உள்ளனர். அதிலும் குறிப்பாக,ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய போது மக்கள் காட்டிய ஆதரவைத் தொடர்ந்து ஆட்சிக் கவிழ்ப்பு நடந்தாலும் ஐ.தே.க கவலை கொள்ள மாட்டாது.

ஆனால் இருதரப்பினருக்கும் இடையிலான முரண்பாடு ஒருகட்டத்தில் ஆட்சிக்கவிழ்ப்பு அன்றி ஆட்சிக்கலைப்பு வரையில் செல்லலாம். ஏனெனில் சந்திரிகா குமாரதுங்க ஆட்சிஅதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்வதனால் அத்தகையதொரு நிலைக்கே செல்லவேண்டி இருக்கும்.

இதேவேளை ஐ.தே.கட்சியும் சனாதிபதி சந்திரிகாவின் பதவிக் காலம் முற்றுப்பெறும் முன்னரே அவரை வீட்டிற்கு அனுப்ப முயற்சிக்கலாம். அதிலும்,மூன்று அமைச்சர்களின் பதவிப் பறிப்பின் பின்னர்,ஐ.தே.கட்சி சனாதிபதி மீது குற்றவியல் பிரேரணை ஒன்று குறித்து தீவிரமாக சிந்திப்பதாகவே தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆகையினால்,பொ.ஐ. முன்னணிக்கும்,ஐ.தே.கட்சிக்கும் இடையிலான முரண்பாடு என்பது மேலும் தீவிரமடைவதற்கு வாய்ப்புள்ளதே ஒழிய அவர்கள் நெருங்கி வருவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. இந் நிலையில் இருதரப்பும் எவ்விடயத்திலும் ஒத்திசைவான உடன்பாட்டிற்கு வருவார்கள் என எதிர்பார்ப்பதற்கு எந்த விதமான தடயங்களோ, சமிக்கைகளோ கிடையாது.

மாறாக இருதரப்பு இடையேயும் மேலும் முரண்பாடுகளும் நெருக்கடிகளும் தீவிரம் பெறவே வாய்ப்புக்கள் உண்டு. இந்நிலையில் தற்பொழுது எழும் கேள்வியானது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சியின் எதிர்காலம் எத்தகையதாக அமையும் என்பதே ஆகும். அதாவது சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காணுமா என்பதே ஆகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு என தெரிவித்துக்கொண்டாலும் அவரின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காண உதவப் போவதில்லை. எடுத்துக்காட்டாக சனாதிபதி சந்திரிகா புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு தனது எதிர்ப்பை ஏற்கனவே வெளியிட்டிருந்தவர். அதையடுத்து விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான நகல் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். தற்பொழுது நோர்வே அரசின் சமாதான முயற்சிகள் குறித்து அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

சனாதிபதி சந்திரிகாவின் இந்நிலைப்பாடானது தற்போதைய சமாதான வழிமுறையை அவர் நிராகரிப்பதாகவே கொள்ளத்தக்கது. ஆகையினால் சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைக்கப் போவதாகக் கூறிக் கொள்வது சந்தர்ப்பத்தின் வசமான நிலைப்பாடே ஒழிய இனப்பிரச்சினை குறித்த உளப்பூர்வமான நிலைப்பாடல்ல. அவரின் நிலைப்பாடு சமாதானத்திற்கான யுத்தம் என்பதே ஆகும்.

இதேவேளை ஐ.தே.கட்சிகூட தற்போதைய சூழ்நிலையில் தமது ஆட்சிஅதிகாரம் பற்றிச் சிந்திப்பதாக இருக்கின்றதே ஒழிய சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் பற்றி ஆர்வம் கொண்டிருப்பதாக இல்லை. ஒரு வகையில் ஆட்சி அதிகாரம் பறிக்கப்படுகையில் சமாதானம் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருப்பது அர்த்தமற்ற தொன்றே.ஆயினும்,ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அரசியல் மூலதனமே அதுவாக இருக்கையில் அது குறித்து கரிசனை காட்டாது போதல் அவ்விடயத்தில் கொண்டுள்ள அக்கறையீனத்தின் வெளிப்பாடேயாகும்.

இத்தகைய நிலைமையானது சனாதிபதிக்கும்-பிரதமருக்கும், அதாவது பொ.முன்னணிக்கும் ஐ.தே.முன்னணிக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீவிரமாக்குவதாக இருக்குமே ஒழிய சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதற்கோ அன்றி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டுவதற்கோ சந்தர்ப்பத்தை உருவாக்கப்போவதில்லை. ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு விரோதமானவை. பின்னடைவை ஏற்படுத்தத்தக்கவை எனக் கூறின் அது தவறாக மாட்டாது.

# பொதுத் தேர்தலுக்கான அவசியம் ஏற்படவில்லை பாராளுமன்றை இனியும் ஒத்திவைக்கமாட்டேன்

### சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

பொதுத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும், பாராளுமன்றம் எதிர்வரும் 19ஆம் திகதி கூடும் என்றும் சனாதிபதி சந்திரிகா குமராதுங்க அறிவித்துள்ளார். அத்துடன் இம்மாதம் 19ஆம் திகதிக்குப் பின்னரும் தாம் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கப் போவதில்லை என்றும் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

தற்போதைய அரசியல் முட்டுக்கட்டைகள் பற்றி பதிலளிக்கும்படி செய்தியாளர்கள் கேட்டதற்கு,

இதற்கான தீர்வு பற்றி தான் ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும், தீர்வுக்கான ஆலோசனை நடடிவக்கை பற்றி பிரதமர்தான் அறிவிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அதேநேரம் அமெரிக்காவுக்குச் சென்று திரும்பிய பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தாம்இன்னும் உரையாடவில்லை. அதற்கான அழைப்பு விடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நிதியமைச்சின் கடமைகளையும் சனாதிபதி பொறுப்பேற்கப் போவதாகக் கூறப்படுவது பற்றிக்கேட்கப்பட்டபோது, அந்த விடயம் தொடர்பாக தாம் இன்னும் ஆலோசிக்கவில்லை என்று கூறியுள்ளார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கைகளை மதித்து இராணுவம் நடந்து கொள்ளும் பிரதமர் தமது சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம் என்றும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

# சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானம் மூலம் சீரமைப்பு

ஊர்காவற்றுறை சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தைப் புனரமைக்கும் பணியில் அப்பகுதி மக்கள் பெருமளவானோர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். சாட்டிப்பகுதி தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து சிரமதானப்பணிகள் மூலம் துப்புரவு செய்து அப்பகுதியைச் சேர்ந்த 155 மாவீரர்களின் நினைவுச்சின்னங் களையும் இதில் நிறுவியுள்ளனர். இதே வேளை ஊர்காவற்றுறையின் சாட்டிப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினரின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாமல் மக்கள் மாவீரர் தினத்தை அனுட்டிப்பதற்குரிய ஏற்பாடுகளையும் செய்துவருகின்றனர். (33)

## வீதிப்புனரமைப்பு

வடமராட்சி கிழக்கின் மருதங்கேணி -தாளையடி வீதி மருதங்கேணிச் சந்தியிலிருந்து தாளையடி வரை புனரமைப்புப் பணி தொடங்கியுள்ளது. தற்போது மாரி மழைபெய்து வருகின்றது. இதனால் இவ்வீதியில் பரவப்பட்டுள்ள கிரவல்களில் மழை நீர்விழுவதால் வீதியில் பிரயாணம் செய்யும்பிரயாணிகள் பெரும் துன்பத்தை எதிர்கொண்டு வருகின்றதைக் காணக்கூடியதாகவுள்ளது. (11)

# ஐக்கிய விடுதலை முன்னணி அரசை அமைக்க சுதந்திரக்கட்சி முயற்சி

(கொழும்பு)

சனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றதையடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நிலைப்பாட்டில் புதிய "ஐக்கிய விடுதலைமுன்னனி" என்ற அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக பொதுசன ஐக்கிய முன்னனி எம்பிக்களுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கான பேச்சுக்கள் இரு தரப்பினராலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சுதந்திரக் கட்சிப் பிரமுகர் ஒருவர் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதற்கான பிண்ணணியை உருவாக்கும் வகையில் நடவடிக்கைகள் திட்டங்கள் பற்றிய அறிக்கை ஒன்றுடனும் சனாதிபதியின் விசேட செய்தியுடனும் வீடுவீடாகச் சென்று ஆதரவு திரட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன் புதிய அரசு ஒன்றை அமைப்பதாக சனாதிபதி தமது எம்பிக்களிடம் கடந்த 4ஆம் திகதி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தம்வசப்படுத்திய அமைச்சுப் பொறுப்புக்களை பொ.ஐ.மு.விற்கு அளிக்க சனாதிபதி உத்தேசம்

### கதிர்காமருக்கும் அமைச்சுப் பதவி

(கொழும்பு)

தமது பொறுப்பில் கொண்டுவரப்பட்ட 3அமைச்சுக்களுக்கும் பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்களைச் சம்பந்தப்பட்ட அமைச்சுப் பதவிகளை நியமிக்க சந்திரிகா உத்தேசித்திருப்பதாகத் தெரியவருகிறது. சனாதிபதி இத்தீர்மானம் எடுத்தமை எதிர்காலத்தில் அமைச்சரவைக் கூட்டங்களின் போது தான் தனிமைப் படாதிருக்கும் நோக்கிலும் தமது பக்கத்திலும் தமக்காகக் குரல் எழுப்புவதற்கும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காகச் சர்வதேச அளவில் புகழ்பெற்ற அரசியல் வாதி ஒருவர் உட்பட மேலும் இருவரை தெரிவு செய்துள்ளதாக லக்பிம பத்திரிகை தெரிவிக்கின்றது.

இவ்வாறான நியமனங்கள் தொடர்பாக சனாதிபதிக்கு அரசியலமைப்பில் அதிகாரம் இருக்கும் அதேவேளை 1991ஆம் ஆண்டில் குற்றப்பிரேரணை சமர்ப் பிக்கப் பட்டபோது அப்போதைய சனாதிபதி பிரேமதாசா தான் தெரிவு செய்தசிலரை அமைச்சர்களாக நியமித்ததை சனாதிபதி சந்திரிகா சுட்டிக் காட்டியுள்ளார்.

# படைசெயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையெனில் மகேஸ்வரனுக்கு தகுந்தபாடம் புகட்டப்படும்

### -யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கில் இராணுவ நடவடிக்கைகளில் முட்டுக்கட்டையைத் தோற்றுவிப்பாராயின் தாம் மகேஸ்வரனுக்குத் தகுந்த பாடம் புகட்டுவதாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறிலங்கா இராணுவத் தளபதி பலகல்லவிடம் எழுத்துமூலம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதம் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்படவுள்ளதாக முப்படைத் தலைமையகம் தெரிவிக்கிறது. தீபாவளி தினத்தன்று பலாலிவிமான நிலையத்தினூடாக யாழ். வந்த அமைச்சர் குழாமை அவர்களுக் கூடான பாதையில் அழைத்துச் செல்ல முயன்றபோது அமைச்சர் இராணுவத்தை பேசியதும், பல இடங்களில் இராணவத்தைப் பகிரங்கமாக பேசியதையும், நடவடிக்கைகளைத் தடுத்ததையும் கடிதம் குறிப்பிட்டுள்ளது.

தொடந்து இப்படியான சம்பவம் நடைபெறாது பார்க்கக் கோருவதுடன் இவ்வாறு நடந்து கொண்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவுஸ்திரேலிய அணி 44 ஓட்டங்களால் வெற்றி

அவுஸ்திரேலிய-நியுசிலாந்து அணிகளுக்கிடையே நேற்று குவஹாட்டியில் நடைபெற்ற முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா நியுசிலாந்து அணியை 44 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி 50 ஓவர்கள் முடிவில் ஆறு விக்கட் இழப்பிற்கு 225 ஓட்டங்களைப் பெற்றது. அணித் தலைவர் பொண்டிங் 52 ஓட்டங்களையும், மைக்கல் பெவன் 84 ஓட்டங்களையும் பெற்றனர்.

226 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய நியுசிலாந்து அணி அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சில்45.3 ஓவரில் 181 ஓட்டங்களுடன் சுருண்டது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக மைக்கல்பெவன் தெரிவானார்.

இத்தொடரின் 7 ஆவது போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி பெங்களூரில் இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இரவு - பகல் போட்டியாக நடைபெறும்.



# சனாதிபதியின் தற்போதைய நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு குந்தகமானவை

## வடக்கு கிழக்கு தொழிற்சங்கக்கூட்டமைப்பு

(திருமலை)

மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதுடன் மற்றும் பாராளுமன்றத்தை ஒத்தி வைத்தது ஆகிய நடவடிக்கைகளை சனாதிபதி மேற்கொண்டது தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கு குந்தகம் விளைவிப்பதாக அமைந்துள்ளது எனவும் சனாதிபதியின் இத்தகைய நடவடிக்கையை கண்டிப்பதாகவும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை திருகோண மலை விக்கினேஸ்வரா மகாவித்தி யாலயத்தில் வடக்குக்கிழக்கு மாகாணததில் உள்ள தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

பின்னர் இலங்கைத்தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர் மகாசிவம் வடக்குக்கிழக்கு அரச உத்தியோகத்தர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் ஏ.கி. தெய்வேந்திரம், வடக்குக்கிழக்கு மாகாண எழுதுநர் அதனோ டுஇணைந்த சேவை உத்தியோகத்தர் சங்கத்தலைவர் சிவபாலன், வடக்குக்கிழக்கு மாகாணப் பொது ஊழியர் சங்கத்தலைவர் எஸ். சுரேந்திரன், வடக்குக் கிழக்கு மாகாண தொழில் நுட்பவியல் சேவை உத்தியோகத்தர் சங்கப் பொதுச்செயலாளர் எஸ். தியாகேந்திரன் வடகிழக்கு மாகாண கால்நடை போதனாசிரியர் சங்கத் தலைவா எஸ்.கருணாராஜ் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்குப் பாதகம் ஏற்படும் வகையில் அமைந்துள்ள சனாதிபதியின் நடவடிக்கைக்கு எதிராக தென்னிலங்கைத் தொழிற்சங்கங்கள் குரல் கொடுக்க வேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது முன்னெடுத்துச்செல்லும் சமாதான முயற்சிகளுக்கு சனாதிபதி பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இது தொடர்பாக சனாதிபதிக்கு வடகிழக்கு மாகாண தொழிற்சங்கங்கள் கடிதம் ஒன்றை எழுதுவது இவ்வாறான தீர்மானங்கள் நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக வடக்குக்கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சம்மேளனத்தின் செயலாளர் தெய்வேந்திரம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)



சவுதி அரேபிய தலைநகரில் நேற்று நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த பகுதியை மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினர்.

# உரிய ஏற்பாட்டாளர் அனுசரணையுடன் சமாதானப்பேச்சுக்கள் நடத்தவேண்டும்

## ஐரோப்பிய யூனியன் வதிவிடப்பிரதிநிதி

தற்போதைய சூழலில் சிறிலங்கா அரசு உரிய ஏற்பாட்டாளர்களது அனுசரணையுடன் சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முன்வர வேண்டுமென ஐரோப்பிய யூனியன் அமைப்பின் வதிவடப் பிரதிநிதி வில்டன் வோவ்ரொச் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் "போர் நிறுத்தம் 2001 சமகாலத்திற்கான படிப்பினை" வடக்கு-தெற்கு ஊடகவியலாளர் சங்கம் எனும் நூல் அறிமுக விழாவில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு மேலும் அவர் உரையாற்றுகையில் சமாதான நடவடிக்கை மேலும் உறுதியாக முன்னெடுக்க அனைத்துத் தரப்புக்களும் இணைந்து செயற்பட முன்வருமாறு அழைப்பு விடுத்த அவர் அவ்வாறான சூழலிலேயே தாமும் இலங்கைக்கான முழுமையான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.30ற்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் நூலினை தேசிய சமாதானப் பேரவையின் ஆளுநர் சபை உறுப்பினரான நிமலன் கார்த்திகேயன் வெளியிட்டு வைக்க, முதல் பிரதியை முன்னாள் தொடர்பாடல் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் பெற்றுக் கொண்டார். நூல் பற்றிய விமர்சன உரையை தேசிய சமாதான பேரவையின் ஊடக இயக்குநர் கலாநிதி ஜெகான பெரேரா ஆற்றினார். (27)

# சிறிலங்கா காவல்துறையில் இடமாற்றங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா காவல்துறையில் இடம்மாற்றங்கள் பல அறிவிக்கப்பட்டுள்ளன. சுயாதீன காவல்துறை ஆணைக்குழு, இந்த இடம்மாற்றங்களை அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில் நேற்று முதல் அமுலாகும் வகையில் கொழும்பு மாவட்ட சிரேஷ்ட பிரதிக்காவல்துறை அதிபர் போதிலியனகே தென்மாகாணம், மத்திய, ஊவா மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களுக்கான பிரதிக்காவல் துறை அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குற்றவியல் பகுதிக்குப் பொறுப்பாக இருந்து சிறிசேன ஹேரத், கொழும்பு மாவட்ட பிரதிக்காவல் துறை அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். குற்றத்தடுப்புத் தகவல்துறைக்கு ஜயந்த விக்கிரமரட்ண நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நிலையை முன்பு வகித்து வந்த காமினி நவரட்ண காவல்துறையின் தலைமையக நடவடிக்கைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் பல இடமாற்றங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. (32)

# பாராளு. மன்றைக் கலைத்து தேர்தல் நடத்தும் எண்ணம் இல்லை

## சந்திரிகா தெரிவிப்பு

பாராளுமன்றத்தைக்கலைத்து தேர்தல் நடத்தும் நோக்கம் தனக்கு இல்லையென சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு பாராளுமன்றத்தைக் கலைப்பதில்லையென இரண்டு வருடங்களுக்கு முன்னரே தான் வாக்குறுதி வழங்கியிருந்ததாக மேலும் அவர் கூறினார். தனது தற்போதைய அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தில் திடீர் தேர்தலுக்கு இடமளிக்கப்படவில்லையென்றும் தற்போதைய பிரச்சினைக்குத் தேர்தல் பரிகாரம் அல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தை முன்விட்டு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படுவதே இப்போது தேவை எனக்குறிப்பிட்ட அவர், தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்த தனது கோரிக்கைக்கு ஏனைய கட்சிகளின் பிரதிபலிப்பை தான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

# வவுனியாவில் வாடிவீடு சீல் வைத்து மூடப்பட்டது

(வவுனியா)

வவுனியா வாடி வீடு நேற்று முதல் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது. இலங்கைச்சட்டத்தின் படி பூரணைதினம் ஒன்றில் மது விற்பனை செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்தத்தடையை மீறி வாடி வீட்டில் மது விற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ள வவுனியா மாவட்ட நீதவான் இளஞ்செழியன் அங்கு சென்ற போது மது வியாபாரம் நடைபெற்றுள்ளது.

இதனை அடுத்து நேற்று வாடி வீடு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன் வாடி வீட்டின் மது விற்பனை நிலையமும் சீல் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வாடிவீட்டிற்கு அருகாமையில் படையினரின் இரண்டு காவலரண்கள் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (21)

# வவுனியாவில் சிப்பாய் காயம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப்பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் வெடிவிபத்து ஒன்றில் படுகாயமடைந்துள்ளார்.

சந்திரபால என்ற இந்த இராணுவச் சிப்பாய் கட்டுத்துவக்கு வெடித்ததிலேயே காயமடைந்ததாகவும் இந்தச்சம்பவம் தொடர்பாக பூரண விசாரணையினை மேற்கொள்ளுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. (21)

### சனாதிபதி...

இடம்பெறவிருந்த இராணுவ நடவடிக்கையை மையமாகக் கொண்டே குரங்குபாஞ்சான் உட்பட திருகோணமலையில் இருந்து துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்பட்டமை சனாதிபதிக்குத் தெரியாத விடயமல்ல. போர் நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆறு கப்பல்களில் ஆயுதங்களைக் கடத்தி வந்தனர் என சனாதிபதி கூறியமைக்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிக்கும் ஆயுத கப்பல்களைத் தாக்கியழிக்குமாறு கடற்படையினருக்கு உத்தரவு வழங்கப்பட்டு இருந்தமை சனாதிபதிக்குத் தெரிந்த விடயமே.

நோர்வே ஏற்பாட்டாளர்கள் மிக முக்கிய இராணுவ முகாம்களை ஒருபோதும் அகற்றும் யோசனையை முன்வைக்கவில்லை. அதே வேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட விரோத கடற்படைப்பிரிவை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரவில்லை. இவை இரண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளால் அரசாங்கத்திடம் நோர்வே ஏற்பாட்டாளர்கள் ஊடாக முன்வைக்கப்பட்ட யோசனைகளாகும் என அமைச்சர் மாரப்பன தெரிவித்துள்ளார்.

உதிரிப்பாகங்கள் பற்றாக்குறையின் காரணமாக கடற்படை மற்றும் வான் படைகளின் கலங்கள் நடவடிக்கைகளில் ஈடுபட வில்லை என்ற குற்றச்சாட்டில் எவ்வித உண்மைகளும் இல்லை. கடந்த இரண்டு வருடங்களில் மாத்திரம் உதிரிப் பாகங்கள் மற்றும் பராமரிப்புக்காக 60% ஆன அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.2001 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற போது பயிற்சி உபகரணங்களுக்கான தற்காலிக பற்றாக்குறை காணப்பட்டது. எனினும் தமது அமைச்சின் கீழ் அது 14 நாட்களுக்குள் நிவர்த்தி செய்யப்பட்டதாக திலக் மாரப்பன தெரிவித்திருக்கின்றார். எனவே சனாதிபதியின் தர்க்கம் உரிய எடுகோள் மற்றும் உரிய தலைமைத்துவம் இன்றி எடுக்கப் பட்ட முடிவுகளாகும் என அவர் தெரிவித்துள்ளார். (32)

### புலிகளின்...

வடிக்கை என்பன குறித்து தீர்மானம் எடுக்கும் சிஹல உறுமய எதிர் வரும் செவ்வாய்க்கிழமை புதிய நகர மண்டபத்தில் கூடவிருக்கிறது. இதில் அண்மையில் இடம்பெற்ற சிங்கள தமிழ் கலை நிகழ்வின் குழப்ப நிலை குறித்தும் ஆராயப்பட வுள்ளது. எனவே இதில் பங்கேற்குமாறு சிங்கள தமிழ் கலை நிகழ்வு ஏற்பாட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக சிஹல உறுமயக்கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக் கரணவக்க தெரிவித்துள்ளார். (32)

### சமாதான...

டோக்கியோ நிதி உதவி மாநாட்டில் தலைமை வகித்த ஐரோப்பிய சங்கம் மற்றும் ஜப்பான் நாட்டுத் தூதுவர்களைப் பிரதமர் இன்னமும் சந்திக்கவில்லை. கடந்த இரண்டு நாட்களாக அரசாங்க ஊடகங்கள் செயற்படும் விதம் சமாதானத்துக்குப் பாதகம் விளைவிப்பதாக அமைந்துள்ளது.

அதன் காரணமாக நடைமுறையில் சனாதிபதி சமாதான முன்னெடுப்புக்களை முன்கொண்டு செல்ல அதிகாரத்தைப் பெற்றுள்ளார்.

சனாதிபதி இதனை முன்கொண்டு செல்லும் போது அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனவும் பிரதம மந்திரி குறிப்பிட்டுள்ளார். போர் நிறுத்த உடன்பாடு நீதிக்கு விரோதமானது என பிரித்தானிய ஒப்சேர்வர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் சனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இந்த உடன்பாடு அமுலுக்கு வந்து 21மாதங்களாகிய பின்னர் சனாதிபதி இவ்வாறு கூறியிருப்பது ஏற்றுக் கொள்ளமுடியாது. இந்தச் சூழ்நிலையில் நாடாளுமன்ற அமர்வை மீண்டும் கூட்ட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். இது தொடர்பாக இன்று நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். (23)

### அமைச்சர்களின்...

தெரிவித்தார்.

இதேவேளை, தொலைக்காட்சியில் என்னை இழிவுபடுத்தியதை எடுத்துக் கொண்டால் நீலப்படங்களைக் காண்பிக் கும் தொலைக்காட்சியைத் தவிர்த்து வேறு தொலைக்காட்சிகள் எந்தவொரு பெண்ணையும் இழிவுபடுத்தாத அளவுக்கு அரச தொலைக்காட்சியும் சரி பிரதமரின் நெருங்கிய உறவினருக்குச் சொந்தமான தொலைக்காட்சியும் சரி என்னை மோசமாக இழிவுபடுத்தியிருந்தார்கள் என்றார்.

பிரதமரால் முன்மொழியப்பட்ட ஒருவருக்கு பாதுகாப்பு விடயத்தில் அதிகாரத்தைத் தான் தற்காலிகமாக மட்டுமே வழங்கியதாகவும், அதுவும் தயக்கத்தோடுதான் அதைச் செய்ததாகவும் சனாதிபதி தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பிரதமர் விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தம் சட்டப்படி செல்லுபடியாகாது ஏனென்றால் அந்த ஒப்பந்தத்தில் தான் கையெழுத்திட்டிருக்கவில்லை என்று அவர் கூறினார்.

அப்படி என்றால் ஏன் அந்த ஒப்பந்தம் தொடர்ந்து அமுலில் இருக்க தாங்கள் உடன்பட வேண்டும் என்று கேட்டபோது, தான் அதில் மறுபடியும் கையெழுத்திட்டுக் கொள்ளலாம் என்பதால் தான் அப்படி செய்ததாகவும் சனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைப் பற்றி தெரிவித்த சனாதிபதி சந்திரிகா, புலிகள் அது பற்றி சிரத்தையாக உண்மையான ஈடுபாட்டுடன் இருக்கின்றார்களா என்பதில் தனக்குச் சந்தேகங்கள் இருப்பதாகக் கூறினார்.

புலிகள் அமைதியை விரும்புகிறார்கள்தான். ஆனால், அந்த அமைதியோடு தனி நாடும் வேண்டும் என்று விரும்புகின்றார்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன். அண்மையில் அவர்கள் சமர்ப்பித்துள்ள திட்ட வரைவை பார்க்கும்போது இதை நன்றாக புரிந்துகொள்ள முடிகின்றது.

விடுதலைப்புலிகளின் தலைவரை நான் என்றுமே ஒரு நல்ல நண்பராகக் கருதாமல் போகலாம். ஆனால், அவரின் அடக்குமுறையின் கீழ் வாழும் பல இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் நலனுக்காக நான் அவருடன் பேசவும் தயார் எனவும் சனாதிபதி சந்திரிகா மேற்படி பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

### புலிகளுடன்...

லைப்புலிகள் முற்பட்டிருந்தனர்.

எனினும் படையினரின் அச்சுறுத்தல்கள் மற்றும் கெடுபிடிகள் என்பவற்றைக் காரணங்காட்டி இம் மாணவிகள் பெற்றோரிடம் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டனர்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு புலிகளால் உடனடியாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து அங்கு வருகை தந்த யாழ். மாவட்டக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் உல்வ் அம் மாணவிகளுடன் பேச்சுக்கள் நடாத்தினர்.

எனினும் படையினரது அச்சுறுத்தல்கள் மற்றும் கெடுபிடிகளாலேயே தமது சுய விருப்பின் பேரில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொள்ள வந்ததாக அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் வீடு திரும்ப மறுத்த இம் மாணவிகள் நீண்ட முயற்சியின் பின் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.